குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 47] பிரபவ ஆண்டு மார்கழித்திங்கள் 10-1-88 [இதழ் 2

அமெரிக்காவிற்குச்சென்று முதல் முறை மருத்துவம் பெற்றுத் திரும்பியபோது
தமிழக முன்னாள் முதல்வர், பொன்மனச்செம்மல்
மாண்புமிகு. எம். ஜி. ஆர். அவர்களுக்கு, அவரது இல்லத்தில்
தருமை ஆதீனத்தின் சார்பில்



ஆதீனத் திருமடம் மற்றும் திருக்கோயில்களின் பிரசாதம்
வழங்கிய காட்சியை ஞானசம்பந்தம் நினைவு கூர்ந்து [illegible]

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தசுவாமிகள்

உ
குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

—

ஈசன் தனதுசத்தி
  யின்பருந்து மீசனுல்
ஆசறத்தன் சத்தியிலின்
  பான்மாவும் — நேச
முடனருந்து மென்னின்முத்தி
  யொவ்வாது பாசம்
விடஅதுவாய் நிற்பதுவாமே.

— முத்திநிச்சயம் 4

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்
முதலியார்

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 47 | 10–1–88 | இதழ் 2

உட்பொருள்

எண்		பக்கம்
1	முதல்வர் மறைந்தார்! முதல்வர் வாழ்க!! ...	57
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	61
3	அருளறம் பூண்ட துறவோர் ...	64
4	கல்வியுகத்திற்குத் தமிழ் (1) ...	65
5	ஸ்ரீ குருஞானசம்பந்தர் மிஷன் (மருத்துவம்) 1986-87 ஆம் ஆண்டு வரவு செலவுப் பட்டியல்	71
6	ஸ்ரீ குருஞானசம்பந்தர் மிஷன் (மருத்துவம்) 1980-81 முதல் 1986-87 ஆம் ஆண்டு வரையுள்ள வரவு செலவுப் பட்டியல் ...	72
7	பொங்கல் வாழ்த்து ...	73
8	அபிராமி அந்தாதி ...	75
9	மேலைநாட்டுத் தத்துவ மேதைகள் ...	78
10	போதமும் சித்தியும் ...	83
11	என்ன சொல்லி எளியன் வாழ்த்துவன்?	86
12	ஏயர்கோன் கலிக்காமர்	89
13	செய்திகள் ...	95
12	எதிர்காலம் ...	99
13	இதழ்வழிச் சைவசமயக் கல்வி III பாடம் - 11 ...	103

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 47 ★ இதழ் 2

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

பிரபவ மார்கழி 10—1—1988

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்

முதல்வர் மறைந்தார்! முதல்வர் வாழ்க!!

எம். ஜி. ஆர். மறைவு:

தமிழக முதல்வராக ஏறத்தாழ பதினொரு ஆண்டுக்காலம் பணியாற்றி வந்த மாண்புமிகு. திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் கடந்த 1987 டிசம்பர் 24 ஆம் நாள் அமரராகிவிட்டார். கடந்த ஐந்து ஆண்டுகளாகவே நலம் குன்றி வந்த அவரை பிரார்த்தனையும் அதன்வழி மருத்துவர்களின் திறமும், பாதுகாத்து வந்தன. ஆயினும் யாரும் எதிர்பாராத நேரத்தில் அவர் மறைவு நேர்ந்துவிட்டது. அவரது மறைவால் பெருந்துயருற்றிருக்கும் அன்னாரின் துணைவி திருமதி. ஜானகி இராமச்சந்திரன் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அவர் உருவாக்கி வளர்த்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும் அவர்பிரிவால் பெருந்துயர் உற்றிருக்கும் லட்சோபலட்சம் தமிழக மக்களுக்கும் ஞானசம்பந்தம் ஆறுதல் கூறுகின்றது. அன்னாரின் நல்லுயிர் எல்லாம் வல்ல இறையருளிற் கலந்து அமைதியுறப் பிரார்த்திக்கிறது.

தனிமனிதப் பண்புகள் :

திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் சிறந்த தனிமனிதப் பண்புகளைக்கொண்டிருந்தார். வாழ்க்கையின்அடித்தளத்திலிருந்து ஊக்கம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி முதலியவற்றால் படிப் படியே வளர்ந்து ஒரு மாநில முதல்வராக உயர்ந்தார். திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் திரைப்படத்துறையிலும், அரசியல்துறையிலும் பெற்ற வெற்றிக்கு அவரது சில நடை முறைகள் காரணங்களாக அமைந்தன. தனிவாழ்விலும், பொது வாழ்விலும், அவர், தன்னைப் போற்றியவர்களையும் அண்டி வந்தவர்களையும் அரணாக நின்று பாதுகாத்தார். ஆனால் தன்னைப் பகைத்தவர்களையும், தூற்றியவர்களையும் தலை எடுக்க முடியாது ஒடுக்கினார்.

''வழிபடு வோரை வல்லறி தீயே
பிறர்பழி கூறுவோர் மொழி தேறலையே
நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி''

என்ற சங்கப்பாடல் வரிகள் அவர் இயல்புகளோடு பொருந்திவரக் காணலாம். திரைப்படத் துறையில், நல்லவராக – நாட்டுக்கு உழைப்பவராக – தீமைகளை எதிர்த்துப் போரிடுபவராகவே நடித்த அவரை மக்கள், நிஜவாழ்விலும் அத்தகையவராகவே கருதினர். அவர் ஆட்சிக்கு வந்தால், அவரால் நன்மை விளையுமென்று நம்பினர். மக்களின் இந்த எதிர்பார்ப்பு அவர் அரசியலில் நுழைய வும், ஆட்சித்தலைமை ஏற்கவும் உதவியது. அவரும் இயன்ற வரை அடித்தள மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றியும் வந்தார்.

கொடைப் பண்பு :

தமிழக வரலாற்றில், அண்மைக் காலத்தில் திரு. எம். ஜி. ஆர். அவர்களைப்போல், தாம் ஈட்டிய பொருளை ஏழை எளியவர்களுக்கு வழங்கிய கொடையாளிகள் எவரும் இலர். அவரைக் கடுமையாக விமர்சித்தவர்கள்கூட, அவரது இந்தக் கொடைக் குணத்தைப் பாராட்டத் தவறவில்லை. விளம்பரம் ஏதுமின்றி, உயிர்க் குணமாகக் கொடையைக் கொண்டிருந்த அவரிடம் உதவிபெற்றோர் ஆயிர மாயிரவர் என்பது அவர் மறைவுக்குப்பின் பெரிதும் அறியப் படுகிறது. இளமையில் வாட்டிய வறுமைத்துயர், மற்றவர்கள் வறுமையின் கொடுமையை உணர்ந்து வழங்கும் நெஞ்சத்தை அவருக்கு வழங்கியது. அவரது விருந்தோம்பலும், தயாளகுணமும்,

மனிதநேயமும் அனைவராலும் பாராட்டப் படுகின்றன. தருமம் தலைகாக்கும் என்றபழமொழி அவர்வாழ்வில் பலமுறை மெய்ப்பிக்கப் பட்டது. அரசியல் வாழ்விலும், பொது வாழ்விலும் அவரது சில செயல்கள் புதிராகவே அமைந்தன. என்றாலும், அவரது கொடைத் திறன் அவரைப் புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றது.

இறை நாட்டம் :

நற்சிந்தனையும், நற்செயல்களும், நல்ல பண்புகளை உருவாக்க வல்லன. நல்ல பாத்திரங்களை ஏற்று நடித்து - நற்பண்புடையவராக வாழ்ந்த திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் நல்ல உள்ளமுடையவராகவே வாழ்ந்தார். இதுபற்றியே அவரைப் பொன்மனச்செம்மல் என்று நாடுபோற்றியது. மக்களின் அன்றாடத் தேவைகளைக் கருத்திற்கொண்டு செயற்பட்டாரேயன்றி-நிலையான வளர்ச்சிப் பணிகளில் அவர் நாட்டம் செலுத்தவில்லை என அவரைக் குறை கூறுவோரும் உண்டு. குறிப்பாகச் சமயத்துறை வளர்ச்சிக்கு அவர் ஏதும் பணியாற்றவில்லை எனக் கூறுவர். என்றாலும், நிலவுடைமையாளர், குத்தகைதாரர் என்ற இருபாலருக்கும் நன்மை செய்யவேண்டுமென்ற அவர் எண்ணம் சில செயல்களின் வழி வெளிப்பட்டது. அவர் இறைநாட்டமில்லாதவராகத் இடைக்காலத்தில் வாழ்ந்திருந்தாலும், பிற்காலத்தில், உடல்நலிவுற்ற காலை மனமாற்றம் பெற்று வழிபாடுகளில் நம்பிக்கை கொண்டிருந்தார். அவர் நலத்திற்காக அவர் தொண்டர்கள் மேற்கொண்ட நேர்த்திக் கடன்களும், பிரார்த்தனைகளும் சமயத்துறை வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக அமைந்தன.

அரசியல் கல்விப் பணிகள் :

அரசுத் துறையில் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் பெற்ற பெரிய வெற்றி- அவர் மத்திய அரசுடன் கொண்டிருந்த நல்லிணக்கத்தால் உருவாயிற்று. தமிழகத்துக்குக் கிடைத்த பல நலன்கள் அவரது இந்த இணக்கமான போக்கால் அமைந்தன. இவ்விணக்கம் அவர் மறைவின்போது, தேசிய அளவில் அனுசரிக்கப்பட்ட துக்கத்திலும் புலப்பட்டது. மத்திய உறவைப் பயன்படுத்திக் கொண்டு, காவிரி நீர்ப்பிரச்சனை, தெலுங்கு கங்கைத் திட்டம் முதலியவற்றை அவர் நிறைவேற்றியிருக்கலாம். என்றாலும், மிகவும் சிக்கலான இலங்கைத் தமிழர் பிரச்சனையில் ஒரு தீர்வு காண்பதற்கு அவர் வழங்கிய ஒத்துழைப்பு மைய அரசிற்கு மனமகிழ்வைத் தந்தது. ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு கண்ட அவர், தமிழ்மொழியின் நிலைத்த, பல்துறை வளர்ச்சி நோக்கில் அமைத்த தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், காலம் உள்ளளவும் அவருக்கு மாறாப் புகழைத் தந்து

நிற்கும். உயர் கல்விக்காக அவர் காலத்தில் தோற்றுவிக்கப்பெற்ற பாரதிதாசன், பாரதியார், அண்ணு, அன்னை தெரசா, அழகப்பா பல்கலைக் கழங்களும், அவர் பெயரால் அமையவிருக்கும் மருத்துவப் பல்கலைக் கழகமும். இணையற்ற சாதனைகளாகத் திகழ்வன.

புதிய முதல்வர் :

தமிழக அரசின் ஒன்பதாவது முதலமைச்சராக—தமிழ் நாட்டின் முதல் பெண் முதலமைச்சர் என்ற பெருமையோடு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் துணைவியார் ஜானகி இராமச்சந்திரன் அவர்களின் எட்டு உறுப்பினர் மந்திரிசபை ஜனவரி ஏழாம் நாள் பொறுப்பேற்றுள்ளது. புதிய முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு. திருமதி. ஜானகி இராமச்சந்திரன் அவர்களுக்கு 'ஞானசம்பந்தம்' நல்வாழ்த்துக் கூறுகின்றது. தம் துணைவரோடு பல்லாண்டுகள் அடுத்திருந்து பெற்ற அரசியல் அனுபவம், பன் மொழி அறிவு, பெரும்பான்மை சட்டமன்ற அ. இ. அ. தி. மு. க. உறுப்பினர்களின் ஆதரவு இவற்றுடன் ஆட்சிப் பொறுப்பேற்றிருக் கும் அம்மையார் ஆட்சிக் காலத்தில் தமிழகம் பல்வளமும் பெற்று மேன்மேலும் வளர்ச்சி பெற்று ஓங்கும் என்று நம்புகின்றோம். ஆட்சி ஏற்றவுடனேயே, தமிழகத்தில் திருப்பணியை எதிர்பார்த்து-சிதைவுற்ற நிலையிலிருக்கும் திருக்கோயில்களை உடனடியாகச் செப்பனிட்டுக் குடமுழுக்குக் காண அம்மையார் முயன்று வருவது அறிந்து மகிழ்கின்றோம். இதுவே இவர் ஆட்சிநலத்திற்குச் சுப சூசகமாகத்திகழும். இத்தகு எண்ணமும் முயற்சியும் அவருக்குத் துணையாக அமையும்.

வாழ்த்து :

தமது ஆட்சியைநிலை நிறுத்தப் பாடுபடுவதோடு, தமது கணவர் வழி நின்று, மைய-மாநில உறவுகளைப் பாதுகாப்பது, இலங்கை ஒப்பந்தத்தை நல்வழியில் கொண்டு செலுத்துவது, ஏழைஎளியவர் நலவாழ்வுத் திட்டங்களைத் தொடர்ந்து கொண்டு செலுத்துவது, குழப்பமற்ற தெளிவான நிலைத்த நல்லாட்சியைத் தமிழ்நாட்டுக்கு வழங்குவது முதலிய பலபெரிய பொறுப்புக்கள் திருமதி. ஜானகி இராமச்சந்திரன் அவர்களுக்குக் காத்து நிற்கின்றன. உடல் நலமும், மனோதிடமும் கொண்டு அம்மையார் தம் பொறுப்புக்களைச் செவ்வனே நிறைவேற்றிச் சிறக்க ஞானசம்பந்தம் நெஞ்சார வாழ்த்துகின்றது.

எம். ஜி. ஆர். ஆன்மா அமைதியுறுக! இறையருளில் இதம் பெறுக! இந்நாள் முதல்வர் இறையருளால் ஏற்றம் பெறுக!

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

பொங்கல் திருநாளையொட்டி

ஞானசம்பந்தம் இதழுக்கு வழங்கியருளிய

ஆசியுரை

9—1—1988

எல்லாம் வல்ல கடவுள் ஒருவரேயாவார். அவர் அம்மை-அப்பர் என இரு தன்மைப்பட்டு விளங்குகின்றார். அவர் இரு கூறுபட்டு விளங்குதல்போலவே அவரால் படைக்கப்பட்ட உலகமும் இடமும் காலமும் என இருதிறப்பட்டு இலங்குகிறது. இடம் பூகோளம் எனப்படுகிறது. காலம் சரித்திரமாகிறது. அவற்றுள் இடமும் இடத்தில் தோன்றும் பொருள்களும் ஆண் பெண் என இரு கூறு உடையதாய்க் காணப்படுகிறது. உலகில் வாழும் ஒவ்வொரு உயிரின் உடலமைப்பிலும் இவ்விருதன்மைகளும் விளங்கி நிற்றலை நுட்பமாக நோக்கினால் நாம் நன்கு காணலாம். ஒவ்வொருவர் உடலிலும் வலப்பாதி ஆண்தன்மையும் இடப்பாதி பெண்தன்மையுமாயுள்ளன. நம் உடலில் வலக்கண் வலக்கை முதலியன பெரியனவாகவும் வன்மை உடையனவாகவும் விளங்குதலையும் இடக்கை இடக்கண் முதலியன சிறியனவாகவும் மென்மை உடையனவாகவும் உள்ளதையும் காணலாம். இவ்வாறே தாவரங்களின் இலைகளும் வன்மை மென்மை - பெரிது சிறிதாக அமைந்திருத்தலையும் பார்க்கலாம். உலகில் காணப்படும் ஜீவராசிகளின் ஒவ்வொரு உடலமைப்பிலும் ஆண்மை பெண்மை கலந்து ஒன்றுயிருத்தல் போல உலக நடைமுறைக்கு முக்கியமான காலத்திலும் இவ்விரு தன்மைகள் விரவி உள்ளதை நாம் காணலாம்.

இனி, காலம் இருதன்மைப் படுவதை நோக்குவோம். ஒரு நாளில் பாதி பகல், பாதி இரவு. பகற்போது ஆண்மைக்கும் இராப்போதைப் பெண்மைக்கும் உரியனவாகக் கூறலாம். பகலுக்குரிய சூரியனை ஆணாகவும் இரவுக்குரிய சந்திரனைப் பெண்ணாகவும் கருதுவதும் இக்கருத்துக்கு அரண்செய்யும். மேலும் சூரியனைக் கொண்டே தந்தைக்குரிய அமாவாசையையும், சந்திரனைக் கொண்டே தாய்க்குரிய பௌர்ணமியையும் நாம் விரதநாட்களாகக் கருதிவருகிறோம்.

காலத்தில் ஒரு நாளைப்போலவே ஒரு மாதமும் சுக்லபக்ஷம், கிருஷ்ண பக்ஷம் என இருகூறுபடுத்தி வழங்கப்படுகிறது. இவ்வாறே 12 மாதங்கள் கொண்ட ஆண்டும் தக்ஷிணாயனம், உத்தராயணம் என இரண்டு பிரிவுடையனவாகக் கொள்ளப்படுகிறது. அயனம் என்ற சொல்லுக்கு வழி என்பது பொருள். சூரியன் தென்திசை நோக்கி வருவதைத் தக்ஷிணாயனம் எனவும் வடதிசை நோக்கிச் செல்வதை உத்தராயணம் எனவும் கூறுகிறோம். சூரியன் செல்ல வில்லை. ஆயினும் நம் கண்களுக்கு அவ்வாறு காணப்படுதலின் இவ்வாறு சூரிய கதிகளை வைத்து ஆண்டினை இரு கூறுபடுத்திக் காட்டினர் பெரியோர்.

ஒரு ஆண்டு தேவர்களுக்கு ஒருநாள் என்று கூறப்படும். ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் முடிய 6 மாதங்கள் தக்ஷிணாயனம் - இராப்பொழுது. தை மாதம் முதல் ஆனி மாதம் வரை 6 மாதங்கள் பகற்பொழுது. இவ்விரு பொழுதுகளாக இம்மாதங்களைக் கொள்வ தால்தான் பகற்பொழுது தொடங்கும் தை மாதத்திலும் இராப் பொழுது தொடங்கும் ஆடி மாதத்திலும் செவ்வாய் வெள்ளிக் கிழமைகளையும் அமாவாசையையும் சிறப்புடையனவாக நாம் கொண் டாடி வழிபாடு முதலியவற்றில் ஈடுபடுகிறோம். இவ்வாறு இறை வனால் படைக்கப்பட்ட உலகப் பொருள்கள் மற்றும் காலம் ஆகிய அனைத்தும் அவ்விறைவனைப் போல அம்மையப்பராய் விளங்குதலி னாலேயே 'சர்வம் சிவமயம்', 'சர்வம் சக்திமயம்' என்ற வாக்கியங்கள் தோன்றலாயின.

கால தத்துவத்தில் ஒரு ஆண்டின் பகற்போதாகிய முதல்நாள் தைத்திங்கள் முதல்நாள்தொடங்குகின்றது. உத்தராயண புண்ணிய காலம் எனவும் சூரியன் தனுர் இராசியிலிருந்து மகர ராசிக்குச் சங்கிரமணமாவதால இந்நாளை மகர சங்கராந்தி எனவும் கூறுவர்.

உத்தராயணம் பகற்போதாகக் கருதப்படுதலினால் மக்கள் நல்லன பலவும் செய்தற்கு இவ் அயனத்தையே சிறப்புடையதாகச் சாத்திரங்கள் கூறுகின்றன. ஆதலின உத்தராயணம இருவகை அயனங்களில் சிறந்ததாகக் கொள்ளப்படுகிறது. பொங்கல் விழா நான்கு நாட்கள் கொண்டாடப்படுகின்றன. அந்நாட்களில் மார்கழி மாத இறுதி நாள் போகிப்பண்டிகையாகவும், தைமாதம் முதல்நாள் பொங்கல் பண்டிகையாகவும், அதை அடுத்த இரண்டு நாட்கள் மாட்டுப்பொங்கல், கன்னிப்பொங்கல அல்லது காணும பொங்கல், கன்றுப்பொங்கல் என்றும தென்னாட்டில் இத்திருநாட்கள்சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

பொங்கல் விழா உழைப்பின பயனை அடையும் உயர்ந்தநாள். உழைப்பிற்கும் பயிர் வளர்ச்சிக்கும் உதவிய தெய்வங்கள், ஆனினங் கட்கு நன்றியறிதலைப் புலப்படுத்தும் பொன்னாள். எனவே இந்நாட்

களிலும் தெய்வ வழிபாடும், ஆன் இன வழிபாடு முதலியனவும் இடம் பெற்றுள்ளன.

போகி என்ற சொல்லுக்கு இந்திரன் என்பது பொருள். இந்திரன் வாகனம் மேகம், எனவே மழை வளந்தந்து காத்த இந்திரனுக்கு நன்றியோடு மக்கள் கொண்டாடும் விழா போகிப் பண்டிகை. இந்திரனுக்கு விழா எடுத்து மக்கள் வழிபட்டு வந்ததைச் சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் நாம் காணலாம். தமிழ் மக்கள் தங்கள் வீடுகளைத் தூய்மை செய்து புதுக்கியும், வெள்ளைதீற்றியும், துணி, படுக்கை முதலியவற்றை நனைத்து உலரவைத்தும் ஆசாரமாக இந்நாளைக் கொண்டாடுகின்றனர்.

பொங்கல் கதிரவனுக்குச் செய்யும் வழிபாடாக நிகழ்ந்து வருகின்றது. உலக வளர்ச்சிக்கும், பயிர்களுக்கும் ஒளி உதவிக் காத்த தெய்வமாகிய சூரியனை இந்நாளில் மக்கள் சிறப்பாக வழிபடுவர். சூரிய ஒளிச்சேர்க்கையால் தழைத்து வளர்ந்து தங்கட்குக் கிடைத்த வாழை, இஞ்சி, மஞ்சள், கரும்பு இவற்றை நாட்டி, புதுப்பானையில் பால் ஊற்றி, வெல்லம் சேர்த்துப் புத்தரிசிப் பொங்கலிட்டு, சாணத்தில் பிள்ளையார்செய்து, அவருக்கும் ஆதித்தர் பன்னிருவர்க்கும் படைத்து மகிழ்வர் நம் மக்கள். உழவுத்தொழில் ஏனைய தொழில்கள் பலவற்றிலும் மேலானது அவ்வாழ்வுக்குப் பயன்பட்டுத் தம் உழைப்பை நமக்கு அளித்து உதவிய மாடுகளைப் போற்றும் நல்விழா மாட்டுப்பொங்கல், கன்னிப் பெண்கள் மார்கழியில் நோன்பு நோற்றுத் தாங்கள் கோலமிட்டு மலர் இட்டு வைத்த சாணத்தால் தட்டிய சிறிய விராட்டிகளைக்கொண்டு நீர்த்துறையில் பொங்கலிட்டுப் படைத்து உண்டு கும்மியடித்து மகிழும் இனிய நாளாகக் கன்னிப்பொங்கல் விளங்குகிறது. இந்நாளில் சிறியவர்கள் பெரியவர்களைக் கண்டு ஆசி பெறும் காரணத்தால இந்நாளைக் காணும் பொங்கல் எனவும், மாட்டின் கன்றுகளுக்குச் சூடுபோடுதல், காதறுத்தல், மூக்குக்குத்துதல் முதலியவற்றை உழவர்கள் செய்வதால் கன்றுப்பொங்கல்என்றும் இந்நாளைக்கூறுவது...டு. இவற்றால் கன்றுகள் சுகாதாரத்துடன் நோயின்றி வாழ்கின்றன என்பர்.

பொங்கல் திருநாள், உழைப்பின் பயனைக் கண்டு மக்கள் உளம் பூரிக்கும் நேரத்தில் அனைத்தையும் இறைவனிடம் படைத்து அகமகிழ்ந்தனுபவிக்கும் நல்விழாவாகத் தமிழ்நாட்டில் கொண்டாடப்படுகிறது.

மக்கள் பொங்கல் திருநாளை இறையுணர்வோடு இனிதே கொண்டாடி இன்புற்று வாழ, செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கிறோம்.

நாடு செழிக்க நன்றி மறவேல் !

அருளறம் பூண்ட துறவோர்

காராளன்

பல்லவி

அருளறம் பூண்ட துறவோர் – உலகில்
அந்தணர் என்னும் அறவோர் – அவரே (அருள்)

அனுபல்லவி

பெரியர் என்பதற் (கு) உரியார் – செய்ய
அரியன யாவும் புரிவர் – அவரே (அருள்)

சரணங்கள்

ஐம்புல ஆசைதனைக் கொன்றவர் – அந்த
ஆற்றலால் தேவரையும் வென்றவர் – நற்
குணமெனும் குன்றேறி நின்றவர் - ஒழுக்கக்
கொள்கையின் வழியே சென்றவர் – அவரே (அருள்)

ஐம்பொறி ஆளும் வழிதெரிந்து - இங்கு
அறநெறி செல்லும் மறைஉணர்ந்து – வாழ்வில்
இம்மை மறுமை வகைஅறிந்து – ஈடு
இணையின்றி வாழ்வார் புகழ்உயர்ந்து - அவரே(அருள்)

இருடனை அள்ளிக்கொள்ள முடியுமா – என்றும்
இறந்தவரை எண்ணிச்சொல்ல முடியுமா
துறவிபுகழ் ஏட்டில் எழுத முடியுமா - அவர்
சினத்தைஒரு கணமேனும் தாங்க முடியுமா? அவரே
(அருள்)

கல்வியுகத்திற்குத் தமிழ் (1)

டாக்டர் திரு. வா. செ. குழந்தைசாமி

துணைவேந்தர், அண்ணா பல்கலைக் கழகம்.

(இக்கட்டுரை, துணைவேந்தர் டாக்டர் திரு. வா. செ. குழந்தைசாமி அவர்கள் கோலாலம்பூரில் நடந்த ஆறுவது உலகத் தமிழ் மாநாட்டில் ஆற்றிய உரையாகும். இக்கட்டுரையில் தமிழில் அறிவியல் இயக்கம், கலைச்சொல்லாக்கம், எழுத்துச் சீரமைப்பு முதலிய துறைகளில் ஆசிரியர் வழிகாட்டுகிறார்.)

பண்டைச் செம்மொழி :

தமிழ் தலைசிறந்த இலக்கியமொழி. உலகின் பண்டைச் செம் மொழிகளில் தமிழும் ஒன்று. பண்டைக் காப்பியங்கள் என்று உலக மொழிகளில் தேர்ந்தெடுத்தோமானால் கூட, அதில் இளங்கோவடி களின் சிலப்பதிகாரமும், கம்பனது இராமாயணமும் தவறாது இடம்பெற வேண்டும். தேர்வு தெளிவானதாக இருக்குமானால், கிறித்துவுக்கு முற்பட்ட காலத்திலேயே இலக்கண அமைப்பிலும், மொழிக்கூறுபாடுகளிலும், இலக்கிய வளத்திலும் முழுமையான வளர்ச்சி பெற்று, ஓர் உயிர்நதிபோன்று உற்பத்தித்தலத்திலிருந்து சங்கமம் வரை வளர்ந்து, விரிந்து, புதுப்பித்து, ஆனால் தொடர்பு அறாது வரும் தனிச்சிறப்புடையது தமிழ்.........

கல்விப் பரவல் :

......கல்வியுகத்தின் விளைவுகளிலும் நாம் பங்கு பெறவில்லை. மனித வரலாற்றின் முக்கியமான காலப் பகுதியில் ஏற்பட்ட மாற்றங்கள், வளர்ச்சிகள் நமது மொழிகளில் இடம்பெறவில்லை. அறிவியல் – தொழில் நுட்பத்துறைகளில் இந்த நிலை என்பதில்லை. அரசியல், பொருளாதாரம், சமுதாய இயல்போன்ற துறைகளிலும் நிலைமை இதுவே......

இந்தியத் துணைக்கண்டத்தை எடுத்துக்கொண்டால் அதன் பெரும் பகுதி அறிவு மொழியாக, கல்வி மொழியாக நீண்ட காலம் வடமொழியைக் கொண்டிருந்தது. பின்னர் அந்த இடத்தைப் பெர்சியமொழி பிடித்தது. அதை யடுத்து ஆங்கிலம் வந்தது. எனவே இங்கு மக்கள் பேசும் மொழிகள் ஆங்கிலேயர் காலத்தில் தான் அறிவுத்துறைகளில் வளரவில்லை என்பது அன்று; அதற்கு முன்னும், மக்கள் மொழிகள் வளம்பெற முழுமையான வாய்ப்பைப்

பெறவில்லை. அறிவு வளர்ச்சியில் சாதாரண மக்கள் பங்கு கொள்ளும் வாய்ப்பைப் பெறவில்லை. தமிழகத்தில் நிலை சற்று வேறுபட்டது என்றாலும் முழுமையாக வேறுபட்டது அன்று.

தமிழ் நிலத்தில் தமிழின் நிலை :

சங்க காலம் மட்டுமே வாழ்வின் எல்லாப் பகுதியிலும் தமிழ் இடம் பெற்ற காலம். பின்னர் சோழர் காலம் தவிர்த்து, ஆங்காங்கு பாண்டியர் ஆட்சி இடம் பெற்றதாயினும், தமிழகம், தொடர்ந்து பிறமொழியாளர் ஆட்சியின்கீழ் வந்தது. களப்பிரர் பாலி மொழியையும், வடமொழியையும் போற்றினர். நாயக்கர் காலத்தில் வடமொழி தலைமை பெற்றது. ஆங்கிலேயர் ஆட்சியில் ஆங்கிலம், மேலே கூறப்பட்ட மொழிகள் எட்டாத இடங்களில் ஊடுருவியது.

தமிழில் உரைநடை பற்றிய குறிப்பு தொல்காப்பியத்திலேயே இடம் பெற்றிருக்கிறது எனினும், மூலநூல் எதுவும் முழுமையாக உரைநடையில் எழுதப்படவில்லை. உரையாசிரியர்கள் உரை நடையைப் பயன்படுத்தினர். மற்றபடி இலக்கியம் கவிதை வடிவில் அமைந்திருந்தது. இலக்கணம், சோதிடம், மருத்துவம், நிகண்டு முதலியவையும் செய்யுள் நூல்களாகவே இருந்தன.

பொதுவாக வேளாண்மைநாகரிககாலத்திலேயே, தமிழகத்தின் ஆட்சியில், அறிவுத்துறைகளில் வழிபாட்டுத் தலங்களில் தமிழின் பிடிதளர்ந்தது. தமிழ் நிலத்தில் ஏற்பட்ட வளர்ச்சிகூட முழுமை யாகத் தமிழில் இடம் பெறவில்லை.

பதினெட்டாம் நூற்றாண்டில் தொடங்கிய தொழில் நாகரிகத் தில் நமது நிலமும் பங்கு கொள்ளவில்லை. இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் துவங்கிய கல்வியுகத்தையும் நாம் ஆங்கிலக்கண் கொண்டு தான் பார்க்கிறோம். அறிகிறோம். எனவே அறிவுத்துறை களில் இரண்டு சகாப்தங்களை இழந்த இனம் நாம். இவ்விரு சகாப்த வளர்ச்சியும் குறிப்பிடத்தக்க அளவில் இன்னும் இடம் பெறாத மொழி நம்மொழி.

கிறித்துவுக்குப் பின்னர் அயல் மொழியாளர் ஆட்சியிலேயே பெரும்பகுதி அமிழ்ந்திருந்த தமிழ் இனம் தனது மொழியை அழியாது, சிதையாது காத்தமையே மனித வரலாற்றிலே ஒப்பிலாத சாதனையாகும். சமயப் பாடல்களும், சமயம் சார்ந்த, சிறுபான்மை சார்பில்லாத இலக்கியங்களுமே தமிழ் மொழியின் வாழ்வுக்குத் துணைசெய்தன. பேச்சு வழக்கில் மக்களிடையே வேரூன்றி, அவர் களது வாழ்வில் இரண்டறக் கலந்திருந்தமையின் ஆணிவேரும், அடிமரமும் வலிமை குன்றாதிருந்தன. மழையும் உரமும் வாய்ந்த போது எல்லாம், வாதும் தளிரும வளரவும், மலரும்கனியும் பொலிய வும் அது உயிர்த் தெழுந்தது. எப்படியிருப்பினும் ஒருமிக நீண்ட

கால அளவு வளர்ச்சியில் தமிழ்முழுதும் பங்குபெருத-பெற இயலாத சூழ்நிலை இருந்து வருகிறது. அது இன்னும் தொடர்கிறது; நாம் இருநூறு ஆண்டுக் காலத்தேக்கத்தைத்தான் ஈடுசெய்கிறோம் என்பதில்லை. ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுக் காலத்தை ஈடுசெய்ய வேண்டும். ஈடுசெய்வது இயலாதது அன்று, ஆனால் எளிதும் அன்று......

நாம் தொழில் யுகத்தினை நமது மொழி மூலம் அறியவில்லை. ஆங்கிலத்தின் வழி அறிந்தோம். அதையே இன்றும் நம்பியிருக்கிறோம்.

அறிவுயுகம் தோன்றிய இந்த நூற்றுண்டின் பிற்பகுதியில் நாம் விடுதலை பெற்றுவிட்டோம். எனினும், அறிவுத் துறைகளில் ஆங்கிலத்தை இன்னும் சற்று அதிகமாகவே நம்பவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். அதற்கான காரணங்கள் பல.

அறிவுவளர்ச்சியின் வேகம் :

......நாளொரு புதுமையும், பொழுதொரு புரட்சியுமாக அறிவுலகம் வளருகிறது. அறிவியல், தொழில்நுட்பத் துறைகளில் அறிவுத் தொகுப்பு பத்து ஆண்டுகட்கும் இரட்டிக்கிறது.

அறிவியல் வளர்ச்சிக்கு அறிவியல், தொழில்நுட்பத் துறைகளில் வரும தாளிகைகளை (Journals) ஒரு சான்றாகக் கூறலாம். 1800ல் சுமார் 100 தாளிகைகள் வெளிவந்தன. 1850ல் சுமார் இது ஏறத்தாழ 1000 ஆக உயர்ந்தது. 1900ல் இது 10,000ஐ எட்டியது. 1950ல தாளிகைகளின் எணணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டியது. இவற்றில் ஆண்டுதோறும் குறைந்தது 12 லட்சம ஆய்வுக்கட்டுரைகள், சில புதிய செய்திகளைத் தாங்கிப் புனைவுகளை, கண்டுபிடிப்புகளைத் தாங்கி வெளிவருகின்றன......

மண்ணினும் வறியது, மக்களினும் வறியது :

நம்மில் அறிவியல், தொழில்நுட்ப அறிஞர்கள் இருக்கிருர்கள். உலக அளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட நிபுணர்கள் இருக்கிருர்கள். அவர்கள் எழுதிய நூல்கள்பல வளர்ந்த நாடுகளில் பாடப்புத்தகங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆனல் அந்த அறிவு தமிழில் இடம்பெறவில்லை. தமிழ்மண்ணில் எண்ணற்ற தொழில் அதிபர்கள் இருக்கிருர்கள். மிக நுட்பமான பல தொழில்கள் உருப்பெற்றிருக்கின்றன. இத்தொழில்கள் பற்றிய துறைகள் தமிழில் இடம்பெறவில்லை. தமிழர் அறிந்ததைத் தமிழ் அறியவில்லை. தமிழரினும் தமிழ் வறிதாக இருக்கிறது. இந்த நிலையிலிருந்து நாம் நம் பயணத் துவக்குகிறோம். நம்பயணம் பெரிது. நமது பாதை நெடிது. நமக்கு வழித்துணையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். காலால் நடக்க முடியாது. கட்டை வண்டியால் சாதிக்க முடியாது. கடல் எனின்

கப்பல் வேண்டும். விண் எனின் விமானம் வேண்டும். வெளி எனின் விண்கலன் வேண்டும். அனைத்தினும் முக்கியமாக நமது மனதில் நமது குறிக்கோள் பற்றிய தெளிவுவேண்டும். குறிக்கோளை அடைவதற்கேற்ற அணுகுமுறைவேண்டும். அதற்கேற்ற அணுகுமுறை வேண்டும். அதற்கேற்ற விழிப்பை விறுவிறுப்பை நாம் காணவில்லை. இது கவலைதரும் நிலை.

அறிவியல் இலக்கியம் :

அறிவியல் துறையில் தமிழ்வளர்ச்சி என்பது வெறும் மொழிபெயர்ப்பு அன்று. அது அறிவியல் இலக்கியம் படைப்பதாகும் அறிவியல் துறைகளுக்கென ஒரு நடையுண்டு. மொழி உண்டு. ஒரு மரபு உண்டு - இலக்கணம் உண்டு. இவற்றை நாம் உருவாக்க வேண்டும்......

செய்ய வேண்டுவன :

தமிழுக்கு அறிவியல் இலக்கியம் எனும் புதுப்பரிமாணத்தைச் சேர்க்க வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. நீண்ட நாட்களுக்கு முன்பே கேட்கப்பட்டது. பலர் பதில் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் விவாதம் ஓயவில்லை. விவாதம் ஒருமித்த கருத்துக்கு வழிகாண வேண்டும். அதன் அடிப்படையில் திட்டம் உருவாகிச் செயல் தொடங்க வேண்டும். நம்மிடை விவாதமும், மேடைப் பேச்சுமே முழுநேர வேலையாகும் சூழ்நிலை உருவாகிவருகிறது. முதலில்இதில் ஒரு திருப்பம் வேண்டும். கீழ்க்கண்ட வழிகள் எண்ணத்தக்கன.

அறிவியல் துறைகள் தமிழில் இடம் பெறச் செய்யும் திட்டத்தை ஒரு மொழிபெயர்ப்புச் செயலாகக் கருதாமல், அறிவியல் இலக்கியம் படைக்கும் மகத்தான பணியாகக் கருதவேண்டும். அதற்கேற்ப நமது செயல்முறை அமைய வேண்டும்.

தமிழில் கலைச் சொற்கள் (துறைச் சொற்கள்) தொடர்ந்து உருவாக்கப்பட வேண்டும். எனவே அதற்குச் சில அடிப்படை விதிகளை வகுத்துக் கொள்ள வேண்டும். கலைச் சொற்களைத் தரப்படுத்துவது (Standardisation of Technical Terms) பற்றியும் சிந்திக்க வேண்டும்.

அறிவியல் இலக்கியம் படைப்பது, ஒருவர், இருவர் செய்யும் பணி அன்று. பரவலாகப் பங்கேற்புத் தேவை. அதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். பல துறைகளில் அறிவியல் தாளிகைகள் (Journals) தொடங்கப்பட வேண்டும் பொது மக்கள் படிக்கும் வார, மாத இதழ்களில் இரண்டு பக்கமாவது அறிவியல் கட்டுரைகட்கு ஒதுக்கப்பட வேண்டும். நாள் இதழ்களில் வாரத்தில் இரண்டொரு நாள் அறிவியல் இலக்கிய வளர்ச்சிக்கான கட்டுரைகட்கு இடம் ஒதுக்க வேண்டும்.

அறிவியல் கட்டுரைகள் பலரால் பரவலாக எழுதப்படவேண்டும். அறிவியல் நூல்கள் பல வெளிவருவதற்கான சூழ்நிலையைப் பல்கலைக் கழகங்கள், அரசு நிறுவனங்கள், பதிப்பகங்கள் உருவாக்க வேண்டும்.

துறை நிபுணர்கள் தமிழ் அறிஞர்கள் அல்லர். துறைநிபுணர், தமிழறிஞர் குழு இணைந்து செயல்பட ஏற்பாடு செய்வது நன்று. தனிப்பட்ட முறையில் துறைநிபுணர்கள் தங்கட்குத் தெரிந்த தமிழில், தங்கட்கு இயன்ற நடையில் எழுதுவதை வரவேற்க வேண்டும், ஊக்குவிக்க வேண்டும்......

அறிவியல் நூல்கள் வளர வளர, அறிவியல் துறையில் எழுதுவோர் தொகை உயர உயரச் சொற்கள் எளிமையும், நடையில் தெளிவும் இயற்கையாக மலரும். எனவே அறிவியல் நூல்கள் தமிழில் நிறைய வெளிவருவது முதல் தேவை.

தந்தி, தொலை எழுதி (Telex), மின் அணுத்தட்டச்சு (Electronic Typewriter), மின் அணுத்துறைதந்த கணிப்பொறி ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும்......

தமிழ்வரிவடிவம், மேலே கூறப்பட்ட காரணங்கட்காகவும்வேறு சிலவசதிகட்காகவும் தேவைப்படும் சீரமைப்பை ஏற்கவேண்டும்.

தமிழ்ப் பெயர்களை, பெயர்ச்சொற்களை ரோமன் வரிவடிவத்தில் எழுதுவதற்கு ரோமன் எழுத்துக்களைப் பயன்படுத்துவதில் பல முறைகள் கையாளப்படுகின்றன. இது தரப்படுத்தப்பட்டு (Standar-dised Form) தமிழ்கூறு நல்லுலகம் முழுவதிலும் தமிழ்ச்சொற்களை, தமிழ்ப் பெயர்களை ரோமன் வடிவத்தில் எழுதுவதில் ஒருமை காணவேண்டும். (Uniformity in the use of Roman Script)

தமிழ் வளர்ச்சிப் பணிகளை அரசியல் சார்பு அற்றதாக அணுகி, அனைவருக்கும் பொதுவான ஒரு பணியாகச் செயல்படுத்தும் குழு ஒன்றினை, தமிழர் கணிசமாக வாழும் ஒவ்வொரு நாட்டிலும் உருவாக்க வேண்டும்.

அறிவியல் தமிழாக்க முயற்சி இந்தியா, இலங்கை, சிங்கப்பூர் மலேசியா ஆகிய நாடுகளில் நடைபெறக்கூடும். எனவே இதில் மேல்நிலை அளவில் தொடர்பும், கூட்டு முயற்சியும் இடம்பெறவும், செய்ததைத் திரும்பச் செய்யாது தவிர்க்கவும், கலைச்சொல் பயன்பாட்டில் ஒருமை காணவும் பன்னாட்டு உறுப்பினர் அடங்கிய குழு ஒன்றும் அமைக்கப்பட வேண்டும்.

கலைச் சொல்லாக்கம் :

அறிவியல் தமிழ்வளர்ச்சிக் கலைச்சொல்லாக்கம் தேவை. இது வரை சிறியனவும் பெரியனவாக 200 தொகுப்புக்கள் வெளி

வந்திருப்பதாகவும், அவற்றில் ஏறத்தாழ 2,00,000 சொற்கள் இடம் பெற்றிருப்பதாகவும் கூறப்படுகிறது. கலைச் சொல்லாக்கம் ஓரளவு நெறிமுறைப்படுத்தப்பட வேண்டும். கீழ்க்கண்ட ஏழுவழிகளை அந்தந்த நிலைக்கேற்பப் பயன்படுத்தலாம்.

1. பழந்தமிழ் இலக்கியங்களை ஆய்ந்து, சொற்களைத் தொகுத்து, அவற்றுள் இன்றைய தேவைக்கேற்பப் பொருள் கொள்ளக் கூடிய சொற்களைப் பயன்படுத்தல்

சான்று - வலவன் - Pilot

வானூர்தி – Aeroplane.

2. தற்கால இலக்கியங்களிலிருந்து சொற்களைப் பயன்படுத்தல்.

3. பேச்சு வழக்கிலிருந்து தகுந்த சொற்களை எடுத்தாளல்.

4. தொடர்புள்ள பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்குதல்.

5. பிறமொழித் துறைச் சொற்களை மொழி பெயர்த்தல்.

6. புதுச் சொற்களைப் படைத்தல்

7. உலக வழக்கை அப்படியே ஏற்றுக் கொள்ளல் அறிவியல் தமிழ் ஆக்கத்தில் நாம் உருவாக்க வேண்டிய துறைச் சொற்கள், குறியீடுகள், சூத்திரங்கள் ஆகியவற்றை நான்கு வகையினவாகப் பாகு படுத்திக் கொள்ளலாம்.

(i) மாற்றம் எதுவும் இல்லாது உலக அளவில் பொதுமையானவையாகப் பயன்படுத்தப்பட வேண்டிய குறியீடுகள், சூத்திரங்கள் (சான்று குறியீடுகள் H; சூத்திரங்கள் H^2O, CO.

(ii) மாற்றமில்லாது அப்படியே ஒலிபெயர்த்துப் பயன்படுத்தப்பட வேண்டிய சொற்கள் சான்று மீட்டர் (Metre), ஓம் (Ohm), ராடர் (Radar).

(iii) மாற்றமில்லாது ஒலிபெயர்ப்பதா, அல்லது புதிய சொற்களை உருவாக்குவதா என்ற கருத்து வேறுபாடுகட்கு இடம்தரும் சொற்கள்.

சான்று : Concrete, Cement, Pump.

(iv) புதிய சொற்கள் உருவாக்கப்பட்டேயாக வேண்டிய சொற்கள்.

சான்று : Stress, Strain, Elasticity.

(இக்கட்டுரையின் பிற்பகுதி அடுத்த இதழில் வெளிவரும்.)

உ

ஸ்ரீ குருஞானசம்பந்தர் மிஷன், தருமபுரம்,

இலவச மருத்துவப் பிரிவு, மயிலாடுதுறை நகர்

1986 - 87 ஆம் ஆண்டு வரவு செலவுப் பட்டியல்

வரவு	ரூ பை.	செலவு	ரூ. பை.
உண்டியல் வரவு	11070—00	மருந்துகள் வாங்கியது	5781 01
வங்கி வட்டி	170—90	அலுவலர் சம்பளம்	2775—00
		கட்டிட வாடகை	1800—00
ஆரம்ப இருப்பு(வங்கி)	2217—61	எதிர்பாராத செலவினம்	506—25
		முடிவான வங்கி கையிருப்பு	2597 50
ரொக்கம்	2—56	ரொக்கம்	1—31
மொத்தம்	13461—07	மொத்தம்	13461—07

ஸ்ரீ குருஞானசம்பந்தர் மிஷன் இலவச மருத்துவப் பிரிவு

தருமபுரம், மயிலாடுதுறை நகர்

1980 - 81 முதல் 1986 - 87 ஆம் ஆண்டுவரையுள்ள வரவு செலவுப் பட்டியல்

ஆண்டு	உண்டியல் வரவு	நன்கொடை வரவு	வங்கி நடைமுதல் வரவு	அலுவலர் சம்பளம்	மருந்துகள் கொள் முதல்	கட்டிட வாடகை	இதரஇனம் செலவு	புதிதாக சிகிச்சை பெற்றவர்கள்	பழைய நோயாளிகள்	மொத்தம் சிகிச்சைப் பெற்றவர்கள்
1980-81	9203-35	1000-00	73-44	1029-00	7051-90		824-22	3482	4683	8165
1981-82	7526-00	500-00	78-57	1270-00	6734-07		451-10	2783	3692	6475
1982-83	5431-50	200-00	54-01	1255-00	4285-46		338-95	1559	2255	3814
1983-84	7758-00	—	68-58	1475-00	4348-03		511-45	2160	2693	4853
1984-85	7863-25	750-00	126-26	1580-00	4589-45	1350-00	294-45	2444	2520	4964
1985-86	8664-00	130-00	157-49	2130-00	4574-92	2850-00	414-00	2718	2707	5425
1986-87	11070-00	—	170-90	2775-00	5781-01	1800-00	315-00 201-25	3345	3960	7305

பொங்கல் வாழ்த்து

டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி

கற்றவர் நெஞ்சில் நீதி
கனிந்திட வில்லை; மக்கள்
பெற்றவர் கடமை யோடு
பிள்ளையை வளர்க்க வில்லை;
உற்றவர், நண்பர் என்ற
ஒட்டுறவு அறவே இல்லை;
முற்றிய பாழில் ஏதும்
முளைக்குமோ? வளர்ச்சி யுண்டோ? (1)

தன்னலம் பிறர் உழைப்பைத்
தனதெனச் சுரண்டும் கீழ்மை;
இன்னல்கள் பிறர்க்குச் செய்தே
இன்புறும் மனத்தின் கோணல்;
உன்னுதல்; நினைத்தல்; பேசல்
உறவிலாப் போலி வாழ்க்கை;
இன்னணம் மக்கள் வாழ்ந்தால்
இயற்கையும் தருமோ வாழ்வு? (2)

ஈட்டிடல், துய்த்து வாழ்தல்,
எல்லைகள் வகுத்துக் கொண்டு
நாட்டினைப் பங்கு போட்டு
நாற்புறம் சுரண்டிச் சேர்த்தல்,
போட்டிகள் இட்டுக் கீழ்மை
புரிவதில் மகிழ்ச்சி கொள்ளல்
காட்டினால், இயற்கை அன்னை
கனிவளோ? நலஞ்சேர்ப் பாளோ? (3)

நல்லதே நினைப்போம்; செய்கை
நடையெலாம் ஒழுக்கம் சேர்ப்போம்!
வல்லமை யாவும் நாட்டை
வாழ்விக்க உறுதி பூண்போம்!

செல்வர்கள், இல்லார் என்னும்
சிறுமையை வேர றுப்போம்!
கல்வியும் பண்பும் பூத்த
கவினுறு நாடு செய்வோம்! (4)

குருமணி அருளும் சொக்கன்
குலவிய காப்பும் நிற்க
வருமொரு துன்பம் உண்டோ?
வறுமையும் நோயும் உண்டோ?
பொருவரு இன்பே யன்றிப்
புவியினில் துன்பம் இல்லை;
பெருமைசேர் பொங்கல் நன்னாள்
பீடுறும் ஐயம் இல்லை. (5)

நன்னெறி; ஒழுக்கம்; சால்பு;
நாணயம்; மனித நேயம்;
இன்னொரு உயிர்க்குத் துன்பம்
இயற்றிடா உயிரி ரக்கம்;
தன்னலம் பேணாப் பண்பு
தழைத்திட, இயற்கை அன்னை
முன்னிலும் அருள்சு ரந்து
முயற்சிக்குத் துணையாய் நிற்பள்! (6)

உயரிய குணங்கள் பொங்கி
ஓங்கியே சிறக்கும் நாளில்
நயனுடைப் பண்பில் மக்கள்
நாட்டமுற் றுயரும் நாளில்.
வியனுல கனைத்தும் வாழ
விழைந்திடும் இனிய நாளில்,
பயனுறும் உண்மைப் பொங்கல்
பாரெலாம் சிறக்கும்! ஓங்கும்! (7)

புத்தமு தனைய பொங்கல்
பொங்குக; தமிழர் வாழ்க;
எத்திசை எங்கும் என்றும்
இன்பமே நிறைக! வாழ்க!
வித்திய அறங்கள் யாவும்
வீறுடன் முளைத்தே ஓங்க!
தைத்திரு நாளில் ஐயன்
தாள்மலர் போற்றி வாழ்வோம்! (8)

கட்டுரை எண். 92

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன் M.A. D., Lit., Ph. D., D. P. P. A., D, U. N., I, U
பருத்தியூர்.

மெல்லிய நுண்ணிடை மின்னனையாளை, விரிசடையோன்
புல்லிய மென்முலைப் பொன்னனையாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும் அடியாரைத் [தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம்தருமே.

அ. மெல்லிய நுண்ணிடை மின் அனையாள் விரிசடையோன் புல்லிய மென்முலைப் பொன் அனையாள்.

(1) அம்பிகையின் மென்மை வாய்ந்த நுண்ணிய இடை மின்னலைப் போன்றிருக்கிறது. விரிந்த சடையை உடைய சிவபெருமான் தழுவிய மென்மையான திருமார்பகம் பொன்னே போன்று இருக்கிறது.

(2) யோகியர்க்குப் புலப்படும் மின்னற் கொடி போன்ற தரிசனத்தை நினைவுபடுத்த மின்னலையும் பாமரர் காணும் அர்ச்சா ரூப தரிசனத்தை நினைவுபடுத்தப் பொன்னையும் கூறினர். மின்னலிடை, கனக கலசம் போன்ற திருமுலை ஆகியவற்றின் தத்வார்த்த விளக்கம் உரிய இடங்களில் முன்னரே கண்டோம்.

ஆ. புகழ்ந்து மறை சொல்லிய வண்ணம் தொழும் அடியார்.

(1) வேதங்கள் புகழ்ந்துரைத்த நெறிப்படித் தொழும் அடியார்களைக் குறிப்பிடுகிறார்.

(2) ஸ்ரீசூக்தம், ராத்ரிசூக்தம் முதலான பகுதிகளில் வேதங்கள் அவளைப் புகழ்ந்து உரைத்தன. பாவனோபநிஷத் சரீரத்தை ஸ்ரீசக்ரமாகப்பாவித்து வழிபடும் முறையினை தெளிவாகப்புகழ்கிறது.

தமிழில் திருமந்திரம் அவளைப் பலவாறு புகழ்ந்து, நுணுக்கமான வழிபாட்டு முறைகளை விளக்குகிறது. ஆகவே, வடமொழி தென்மொழி மறைகளில் உரைத்தபடி அவளை வழிபடும் அடியவர் சிறப்புக்குரியவர். அவளது வழிபாட்டு ஆகமமான ஸ்ரீதந்திரத்தைச் சிவபெருமானே உலகுக்கு அளித்தார். இறைவன் மொழி மறையே ஆகும். அவன் புகழ்ந்து சொல்லிய வழியில் வழிபடும் அடியவர் சிறப்புக் குரியவர்.

(3) அபிராமி பட்டர் இங்கு மீண்டும் வேத வழியான வழிபாட்டைப் புகழ்வதிலிருந்து அவருக்குத் தீய வழிபாட்டு முறைகளில் நாட்டமில்லை என்பது புலனாகிறது. அவரை அவரது ஊர் மறையினர் குறைகூறினர். அவரோ மறை சொல்லிய உண்மை நெறியினைப் புகழ்கிறார்.

இ. அடியாரைத் தொழுமவர்க்குப் பல்லியம்
ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம் தருமே.

(1) மறை சொல்லியபடி வழிபடும் சிறப்புடைய அடியாரைத் தொழும் அடியார்க்கு (அடியார்க்கு அடியார்) அம்பிகை பல இசைக் கருவிகளும் ஆர்த்தொலிக்க வெள்ளையானை (அல்லது வெள்ளை எருது) மீது ஊர்ந்து செல்லும் பதவி அளிப்பாள்.

(2) அடியார்க்கு அடியார் எய்தும் சிறப்பு இதனால் உரைக்கப்பட்டது. வெண்பகடு ஊரும் பதம் என்பது வெள்ளை யானையாகிய ஐராவதத்தின் மீது பவனிவரும் இந்திரப்பதவி என்று பொதுவாகப் பொருள்கொள்வர். அடியாரைப் பேணும் அன்பரும் அடியார்எய்தும் சிறப்பினை எய்துவர் என்பது சைவ – வைணவ – சாக்த நெறிகள் அனைத்தும் காட்டும் உண்மை. இறைவனை வழிபட்ட அன்பருக்கும் திருத்தொண்டரைப் பரவிய அன்பருக்கும் ஏற்றத்தாழ்வு எதுவும் இல்லை. எடுத்துக்காட்டாக அப்பரின் திருநாமத்தினாலேயே ஈடிலாச் சிறப்புப் பெற்ற அப்பூதியாரின் புகழ் தேவாரத்தில் இடம்பெற்றுவிட்டது. எனவே வெண்பகடுஊரும் (ஐராவதத்தில் ஊரும்) இந்திரப் பதவியினை அடியார்க்கு அடியார் எய்துவர் என்பது பொருந்தாது. பயன் கருதி வழிபடுவோர் வேண்டுமானால் அதனை எய்தலாம், மறை சொல்லிய வழி தொழும் அடியாரைத் தொழும் அன்பர் அதனினும் மேலான பதமே எய்துவர். அதுதான் வெள்ளை எருதின் மேல் ஊரும் நிலை. பகடு என்ற சொல் யானை மற்றும் எருதினைக் குறிக்கும்.

(3) "பகடு நடந்த கூழ் பல்லாரோடு உண்க" என்ற நாலடியாரிலும், "பகடென்றேன் உழுமென்றான் பழனத்தன்னை" என்ற சிலேடைப்பாடலிலும் இதனைக் காணலாம். வெள்ளை எருதின் மேல் ஊரும் பதம் எய்திய வரலாறுகள் உண்டோ எனில் உண்டு.

(4) திருவிளையாடற் புராணத்தில் விருத்தகுமார பாலரான வரலாற்றில் சான்று இருக்கிறது. அம்பிகை மந்திரத்தை உணர்ந்திருந்த கௌரி என்ற பெண் அடியார் உருவில் வந்த விருத்தனை உபசரித்து வழிபட்டார். பின் இறைவன் குமாரனாகவும் பாலனாகவும் மாறி இறுதியில் கௌரியை உமைவடிவாக்கி வெண்பகட்டில் ஏற்றிச் சென்றான்.

(5) "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை யாண்ட அத்தன் எனக்கருளியவாறு யார் பெறுவார்?" என்று வியந்த மணிவாசக சுவாமிகள் திருப்பெருந்துறை (ஆவுடையார் கோவில்) ஆலய விழாவில் ரிஷப வாகனத்தில் தான் பவனி வருகிறார். இது வெண்பகடு ஊரும் பதந்தானே?

(6) சிவாலயப் பெருவிழாக்களில், குறிப்பாகத் தொண்டை மண்டலத்தில் ஐந்தாம் நாள் விழா வெள்ளிவிடைக் காட்சி அல்லது ரிஷப வாகன தரிசனம் ஆகும். அப்போது பஞ்ச மூர்த்திகளும் எழுந்தருளுவர். விநாயகர் மூஷிகவாகனத்திலும் முருகன் மயில்வாகனத்திலும் வருவர். அம்பிகையும் இறைவனும் ரிஷபவாகனத்தில் வருவர். ஐந்தாவதான மூர்த்தி சண்டேஸ்வரர் ரிஷப வாகனத்தில்தான் வருவார். இதுதான் வெண்பகடு ஊரும் பதம்.

(7) அப்படி வெண்பகடு ஊர்ந்து வரும் பொழுது பல இசைக் கருவிகளும் முழங்குகின்றன. 'இயம்' என்றால் இசைக்கருவி. பல்லியம் என்றால் பல இசைக்கருவிகள். பல இசைக் கருவிகளை இசைக்க வல்லவர்களைப் 'பல்லியத்தனர்' என்று தமிழ் நூல்கள் உரைக்கும், ஆர்க்கெஸ்ட்ரா என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான பழந்தமிழ்ச் சொல்தான் 'பல்லியம்' என்பது.

(8) "பதந்தருமே" என்றதால் அம்பிகையில் நிர்க்குண சகுண நிலைகள் இரண்டும் உணர்த்தப்பட்டன. 'அம்மாவரும்' என்பது போலச் செய்யும் என்னும் வாய்ப்பாடாக நிற்கிறது. அனைத்தும் கடந்த பரம்பொருளைப் 'பதம் தரும்' என உணர்த்துகிறது.

வாகன யோகம் பெறுதல் இப்பாடலின் பாராயணப் பலன் ஆகும்.

(தொடரும்)

மேலை நாட்டுத் தத்துவ மேதைகள்
(Western Philosophers)

சுவாமி வீரபாகு

(மலர் 47. இதழ் 1, பக்கம் 24 இன் தொடர்ச்சி.

2. பிளேட்டோ (Plato) - தொடர்ச்சி (3)

(கி. மு. 427-347)

அல்லல்கள் அனைத்தும் அறிவு இல்லாமையாலே :

''பிளேட்டானிஸம்'' (Platonism) என்ற பதம் பொதுவாகப் பிளேட்டோவின் போதனைகளைக் குறிக்கின்றது என்றாலும், அஃது அவர்தம் நீதித்தத்துவ போதனைகளையே (Ethical Teachings) சிறப்பாகவும் குறிப்பாகவும் சுட்டுகின்றது. ''மனிதனுக்கு நல்லது எது?'' ''மனிதன் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?'' - இவ்விரு வினாக்கட்கும் விடையாக அமைவதே நீதிசாத்திரம் (The Science of Ethics) எனப்படும். பொதுவானதொரு நிலை என்னவென்றால், நாம் நல்ல முறையான வாழ்க்கை எது என்பதை அறிந்து கொண்டால் இயல்பாக அதனை எய்துதற்கான முயற்சியில் நாம் ஈடுபடக் கூடும் என்பதாகும். இது தான் பிளேட்டோவின் முதல் முக்கிய - புகழ்வாய்ந்த கோட்பாட்டிற்கு அடிப்படை ஆகும். அதனையே ''பிளேட்டானிஸம்'' என்று பலவாறு அன்பர்கள் பாராட்டிப் பேசுவார்கள், அக்கோட்பாட்டினை ஈண்டுச் சிறிது விரிவாகச் சிந்திப்போம்.

பிளேட்டோ இக்கோட்பாட்டினைத் தம் பெயராலே தாம் கருதுவதாகத்-தெரிவிக்கவில்லை. அவரது ''உரையாடல்களில்'' (Dialogues) சாக்ரட்டீசுடன் அவர் காலத்தில் வாழ்ந்த (கி. மு. 5-ம் நூற்றுண்டைச் சேர்ந்த) நாலு ஐந்து தத்துவமேதைகளுடன் உரையாடுவதாகவும், அவர்கட்கு சாக்ரட்டீஸ் தம் கருத்தைத் தெரிவிப்பதாகவும் பிளேட்டோ அமைத்திருக்கிறுர், எனினும் பிளேட்டோ தமது கருத்தையே தம் குருநாதர் வாயிலாக - தம் குருநாதர் சாக்ரட்டீஸ் பெயராலே - உலகுக்குச் சாற்றுகிறுர். ஆகையாலே அது ''பிளாட்டானிசம்'' - பிளேட்டோவின்

தத்துவம் என்று அறியப்படுகிறது. இச்செயல், பிளேட்டோவிற்குத் தம் குருவாகிய சாக்ரட்டீஸ்பால் எத்துணை பக்தி இருந்தது என்பதையும், தாம் கற்ற அத்தனையும் தமக்கு சாக்ரட்டீஸ் அளித்த பிச்சை என அவர் கருதுவதையும் புலப்படுத்துகிறது.

"அல்லல் அனைத்தும் அறிவு இல்லாமையால்தான் ஏற்படுகின்றது" என்பதுதான் பிளேட்டோ போதிக்கும் சித்தாந்தம். (All evil is due to lack of Knowledge) ஒரு மனிதன் எது சரியானது என்பதைக் கண்டறிந்துவிட்டான் என்றால் அஃது அவனைத் தீய வழியில் நடக்க ஒண்ணுதபடி ஆக்கிவிடும் என்று பிளேட்டோ கருதுகின்றார். ஆனால் பிரச்சனையோ, எது நல்லது என்பதனைக் கண்டறிவதில் இருக்கிறது. எது நல்லது என்பதில் இயல்பாகக் கருத்து வேற்றுமை நிலவுவதைக் கண்கூடாகக் காண்கின்றோம்.

கணித சாத்திரம் போல :

இவ்வினவிற்கு பிளேட்டோவின் பதில் பசுமரத்து ஆணிபோல் பதிவதாக அமைந்து உள்ளது. நல்ல வாழ்வின் இயல்பினைக் கண்டு அறிவது, அறிவாற்றல் சம்பந்தமான பணி (Intellectual task) ஆகும். இவ்வகையில் இப்பணி கணித சாத்திரத்தை நிகர்க்கும் என்கிறார் சிந்தனையாளர் பிளேட்டோ. 'ஈராறு பன்னிரண்டு' என்பது வாய்ப்பாடு அறிந்தவனே அறிவான். அதிலே பயிற்சி இல்லாதவன் அதனை அறிவது கடினம். அதேபோல் நல்லனவற்றைப் பற்றி நாளும் கற்று அறியாத பாமரன் அவற்றை உணர இயலாது. அத்தகைய அறிவு, மிக நுட்பாகக் கற்பிக்கப் பட்டால் அன்றி - கணிதம், தத்துவம், வானசாத்திரம் போன்ற துறைகளில் ஈடுபடுத்திக் கற்பித்தால் அன்றிக் கைவரப்பெருது எனப் பிளேட்டோ கருதுகிறார், பிளேட்டோ நம்புகிறார். நீண்ட காலம் அத்தகைய அறிவுப் பயிற்சி (Intellectual training) அளிக்கப்பட்டால் அன்றி நல்வாழ்வின் இயல்பினை ஒருவன் நன்றாக அறிந்து கொள்ள இயலாது.

வித்தியாசம் உண்டு :

இங்கு பிளேட்டோ இது சம்பந்தமான ஒரு வித்தியாசத்தைச் சுட்டிக் காட்டுகிறார். நல்வாழ்வை வாழ ஒருவன் அறிவு மிக உடையவனாக இருக்க வேண்டும் என்பதை அவர் வலியுறுத்திப் பேசவில்லை. அறிவுடைமை (Knowledge) மிகக் கொண்டவனாக இல்லாத ஒருவனும் கூட நல்வாழ்வு வாழமுடியும். ஒருவனுக்குப் பொது அறிவு இருந்தால் எது நல்லது எது கெட்டது என்பதை எளிதில் விளங்கிக் கொள்ள இயலும் என்பதை அவர் ஒத்துக் கொள்கிறார். அறிவு மிக இல்லாத ஒருவனுக்கும் கூட நல்வாழ்வு வாழ இயலும். ஆனால் ஒரு வித்தியாசமுண்டு; அவன் அதனைச்

சீராகச் செய்ய இயலாது. குருட்டுத் தனமாக அல்லது தட்டுக் கெட்ட முறையிலே தற்செயலாகத் (Accidental) தான் ஆற்ற முடியும்-அது சிறப்பாகவும், முறையாகவும், விஞ்ஞான ரீதியாகவும், நீதிசாத்திர நேர்மையோடும் நேர்மையோடும் நிகழ்த்த முடியாது' அதற்காகத்தான் அவர் அறிவு வேண்டுப எனபதை அழகாக வற்புறுத்திப் பேசுகிறார். அதனால்தான் பிளேட்டோ, நல்வாழ்வு வாழ மாந்தருக்கு அறிவுத்துறையில் அவசியமான பயிற்சித்திட்டம் தேவை என்பதை (Programme for training men) வலியுறுத்து கிறார். நல்வாழ்வு வாழவைக்கும் பயிற்சியைப் பிளேட்டோ இரு விதமாக நல்கச் சொல்லுகிறார். ஒருபக்கம் அவர்களுக்கு நடத்தையில் நல்ல பழக்க வழக்கங்கள் (Virtuous habits of behaviour) அபிவிருத்தி ஆக வேண்டும். மற்றொரு பக்கம் அவர்கள் தம் மனோ சக்திகள் (Mental powers) வளர்ந்தாக வேண்டும். அத்தகைய அம்சங்கள் எல்லாம் கணிதமும் தத்துவமும் கற்பதனாலே தான் எய்த முடியும் என்பது பிளேட்டோவின் நம்பிக்கை.

பயிற்சியின் இன்றியமையாமை :

மேலே குறிப்பிட்ட இரண்டு அம்சங்களும் எய்தப் பெறப் பயிற்றுவித்தல் மிகமிக அவசியம். ஆரம்பத்தில் ஒருவனுக்கு ''நல்வாழ்வு என்பது என்ன?'' என்பது நன்றாகப் புரியாமல் இருக்கலாம். அவன் அத்தன்மையில் ஆன்றமைந்தடங்கப் பயிற்று விக்கப்பட்டோரோடு இணைந்து நிற்கும்போது - உடனிருந்து உரிய முறையில் கற்கமுயலும்போது, சூழ்நிலை காரணமாகவும் ஆள்வினை காரணமாகவும், காலக்கிரமத்தில் அதனைக் கற்றுக்கொண்டு விடுகிறான்.† உதாரணமாக, ஒருவன் உயர் கணிதத்தை உற்றறிய முடியாமல் இருக்கிறான். வகுப்பில் மற்றவர்களோடு வந்திருந்து பயிலும்போது கணித சூத்திரங்களைப் படிப்படியாகப் பயின்று கொள்ள வாய்ப்பு உண்டாகிறது. ஓர் '' இலட்சிய சமுதாயம் '' (ideal society) எப்படி அமைப்பது என்பது பற்றி பிளேட்டோ "குடி அரசு" (Republic) என்ற நூலில் குறிப்பிட்டு விளக்குகிறார். இலட்சிய சமுதாயம் அமையக் 'கண்டிப்பு முறை' (The Method of Censorship) வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார் பிளேட்டோ. இளைஞர்களைத் தீய அல்லது நல்லதற்ற சூழ்நிலையில் நுழையவிடாமல் காக்க வேண்டுவது கடமையாகும் எனவும் பேசுகிறார். இளம் உள்ளங்கள் இடறி வீழ்வது இயல்பு; எனவேதான் கண்டிப்பு முறை அவசியமாகிறது என்று பிளேட்டோ பேசுகிறார்.

---

† நிலத்தியல்பால் நீர்திரிந்தற் றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு — குறள்.

இரண்டாவதாக, இத்தகைய நல்ஒழுக்கப் பயிற்சியால் மாணாக்கரிடம் மறைந்து கிடக்கும் மகத்தான மனோசக்திகள் (Hidden mental powers) வெளிப்பட வாய்ப்புக் கிடைக்கிறது. உன்னதமான பழக்க வழக்கங்கள் உண்டாவதைக் காட்டிலும் மறைந்து உறங்கும் மேதா விலாசம் வெளிப்பட வாய்ப்பளிப்பது மிகவும் வேண்டற்பாலது. இதனால் மாணாக்கர் சரியான முறையிலும் ஒழுங்கான ரீதியிலும் ஒழுக, (To act rightly and morally) தேவைப்படும் அறிவு அவர்கள்பால் தோன்றவும், நல்வாழ்வின் நலங்களையும் இயல்புகளையும் அவர்கள் உணரவும், காணவும் சந்தர்ப்பம உண்டாகிறது என்பது குறிப்பு.

"முழுத்தன்மைக் கோட்பாடு" :

பிளேட்டோவின் தத்துவத்திலே அடிப்படைத் தன்மை ஒன்றுண்டு. அதனை இக்காலத் தத்துவமேதைகள் "பிளேட்டோவின் முழுத்தன்மைக் கோட்பாடு" (Plato's Theory of Absolutism) என இயம்புவர். அவர் கூறுவதாவது: "எல்லா மக்களுக்கும் வாழவுள்ள நல்வாழ்வு, அடிப்படையில் ஒன்றுதான் - ஒன்றே ஒன்று தான்" ("There is fundamentally one and only one good life for all men to lead") நல்ல தன்மை (Goodness) என்பது ஒருவனுடைய ஆசாபாசத்தை அடுத்தது அல்ல. அவனுடைய கருத்தை அனுசரித்தது அல்ல. அவனுடைய விருப்பத்தை ஒத்ததும் அல்ல; அது கணித சூத்திரத்தைப் (Mathematical formula) போன்றது என ஒத்திட்டுக் காட்டுகிறார். அஃது ஒரு முழுத்தன்மை கொண்டதோர் உண்மையாகும். ("This is a truth which is absolute") நல்ல தன்மை என்பது மனிதரைக் கடந்து தனித்ததொரு தத்துவமாக நிற்கிறது. தக்கமுறையில் பயிற்சி தரப்பட்டால், ஒவ்வொருவரும் தாமே அதனைக் கண்டுபிடிப்பார்கள்; கண்டுபிடித்து அதன் வழி ஒழுகுவார்கள். அவர்களே தக்க "தத்துவஞானி - அரசனாகத்" (Philosopher - King) தலை எடுக்க முடியும். இதனையே பிளேட்டோ "பொருண்மையான நீதிநெறிச் சட்டம்" (Objective Moral Law) எனக் குறிப்பிடுகிறார். "பொய் சொல்லல் ஆகாது" என்ற நீதிநெறி இந்நாட்டுக்கு மட்டும் பொருந்தும் நெறி அல்ல - இவ்வுலகம் முற்றும் ஏற்கத் தகும நீதிநெறிச் சட்டமாக (Moral Law) இலங்குகிறது. 'இத்தகைய நீதிநெறி நிலைகள் ஈசுவரனினும் மேலானவை' ("Moral Standards are superior even to God") என்பது பிளேட்டானிஸம் தெரிவிப்பது.

பிற்காலத்தில் கிருஸ்தவமதம் போன்ற சமய அமைப்புகள் கூட பிளேட்டோவின் இக்கோட்பாட்டைத் தத்தம் தத்துவங்களில்

இணைத்துக்கொண்டன என்று ஆராய்ச்சியாளர் சுட்டிக்காட்டுகின்றனர். உதாரணம் ஏசுநாதரின் ''பத்துக் கட்டளைகள்''.

ஆதார நூல்கள் :

100 Great Thinkers by Dr. Jay E. Greene.
Living Biographies of Great Philosophers by Thomas & Thomas
A History of Western Philosophers by Bertrand Russell.
Philosophy Made Simple by Richard H. Popkin and Avrom [Stroll
Students' History of Philosophers by Arthur Kenyon Rogers.
Get to know Philosophy By Hugh Harris.

(தொடரும்)

முத்தராவர் எவர்?

என்னை அறிவென்றான் என் அறிவில் ஆனந்தம்
தன்னைச் சிவமென்றான் சந்தமும் — என்னையுன்னிப்
பாராமறைத்ததுவே பாசம் என்றான் இம்மூன்றும்
ஆராய்ந் தவர்முத்த ராம்.

— சிவபோகசாரம்.

தனுகரண முதலியவற்றை யான் அல்ல எனக் கழித்தும், இனி யான் யாதாகற்பாலேனெனத் தேடியும் நின்ற அறிவுதானே யான் என்றும் அவ்வறிவின்கண்ணே வறியார்க்குக் கிழியீடு நேர்பட்டாற் போல இதுகாறும் கண்டறியாததாய்த் தோன்றும் ஓர் இன்ப உணர்வுதானே சிவம் எனவும் இவ்வாறு எனது உண்மை நிலையை உற்று நோக்காதவாறு என் அறிவை எப்பொழுதும் மறைத்து நின்றது தானே பாசம் எனவும் கூறி அருளினார் எம் அருட்குரவர். யான் எனப்பட்ட பசுவும், சிவன் எனப்பட்ட பதியும், பாசமுமாகிய இப் பொருள் இயல்பை ஆராய்ந்து, ஐயந்திரிபுஅற உணர்ந்தவரே பாசவிடுதியை (முத்தியை)ப் பெறுவர்.

போதமும் சித்தியும்

டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன்

மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கனுள்ளும் முதல்நூல் வழி நூல் என்னும் பெருமையும் முதல் நூல் அதற்குச் செய்யுள் வடிவாலாய உரை நூல் என்னும் சிறப்பும் ஆசிரியர் மாணக்கர் எழுதிய நூல்கள் என்னும் உரிமையும் உடைய நூல்கள் சிவஞான போதமும் சிவஞானசித்தியாரும் ஆகும். இந்நூல்கள் இரண்டும் தொடக்கம் முதல் நிறைவு வரை சொல்லாலும் கருத்தாலும் எங்ஙனம் ஒத்து அமைந்திருக்கின்றன என்பதை விளக்குவதே இத்தலைப்பின் நோக்கமாகும்.

மெய்கண்டாரால் அருளிச் செய்யப்பெற்றது சிவஞானபோதம். அவரின் தலைமாணக்கர் அருள்நந்திசிவாசாரியரால் அருளப் பெற்றது சிவஞானசித்தியார். சுருங்கிய சொற்களால் அமைந்த சிவஞானபோதத்தினை, வேண்டும் அளவுக்கு விரிந்த சொற்களால் விளக்கிக் கூறுவதே சிவஞான சித்தியாரின் கருத்தாகும். முன்னோர் நூலின் முடிபு ஒருங்கு ஒத்தல் மட்டுமன்றிப் பின்னோன் வேண்டும் விகற்பம் கூறுதலும் வழி நூலுக்கு இலக்கணமாதலின் அவ்வகையில் சிவஞானசித்தியார் நுட்பமாகவும் தெளிவாகவும் விரிவாகவும் மேலும் சில கருத்துக்களைக் கூறுகிறது. சூத்திர யாப்பும், வெண்பா யாப்பும் கொண்டு சிவஞான போதம் அமைந்திருத்தலின் சுருங்கிய நிலையில் கருத்துக்களைக் கூறவும் விருத்த யாப்பில் சித்தியார் அமைந்திருத்தலின் விரிந்த நிலையில் கூறும் வாய்ப்பைப் பெற்றது.

கடவுள் வாழ்த்து :

ஆன்றோர் ஆசாரத்தைக் காத்தற் பொருட்டும் மாணக்கர்கட்கு அறிவுறுத்தல் வேண்டியும் மெய்கண்ட தேவரும் அருள்நந்தி சிவாசாரியாரும் முதற்கண் விநாயகர் வணக்கம் கூறுகின்றனர். சிவஞானபோதம் விநாயகர் வணக்கத்திற்கு 'மங்கல வாழ்த்து' என்று பெயர் கூறுகின்றது. சித்தி, 'விநாயகர் வணக்கம்' என்றே குறிக்கின்றது.

கடவுள் வாழ்த்தினை மூவகையாகப் பிரிப்பர். அவை வாழ்த்து, வணக்கம், பொருளியல்பு உரைத்தல் என்பன. அவற்றில் சிவஞான போதத்தின் வாழ்த்து, 'பொருளியல்பு உரைத்தல்' ஆகும். சித்தியின் வாழ்த்து, 'வணக்கம்' ஆகும்.

"கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே"

என்பது போதத்தின் மங்கல வாழ்த்தாகும். சிவபெருமான் மேன் மேலும் அருள்கூர்தற் பொருட்டு, பொல்லாப் பிள்ளையாரின் திருவடிமலர்களை நல்லோர் புனைவர் என்பது இதன் பொருளாகும். அருளிய என்பதற்கு இறைவன் அருள்கூர்தற் பொருட்டு என்று பொருள்கூறி, அச்சொல்லை, வினை எச்சமாக்கிப் புனைவர் என்னும் வினைமுற்றுடன் முடிப்பர். இதனால் சிவபெருமானும் விநாயகரும் வேறு வேறல்லர் என்னும் உண்மையை உணரவைத்தார். இனி, இங்ஙனமன்றி, அருளிய என்பதைப் பெயரெச்சமாக்கி "மலை வில்லார் அருளிய பொல்லாப் பிள்ளையார்" என்று கூட்டிப் பொருள் கூறுதலும் உண்டு.

இவ்வாழ்த்து, நூல் நுதலிய பொருள் அனைத்தையும் குறிப்பால் தந்து நிற்கும் இயல்பினது. இதில் 'கல்' என்பது முதல் 'ஏ' என்பது இறுதியாகப் பன்னிரு சொற்கள் உள்ளமை, இந்நூல் பன்னிரண்டு சூத்திரங்களால் ஆனது என்பதைக் குறிப்பால் விளக்கியும் இதில் மும்மூன்று சொற்களை ஒவ்வொரு அடியாக வைத்து நான்குஅடிகள் உள்ளமை, இந்நூல் மும்மூன்றுசூத்திரங்களை ஒவ்வொரு இயலாக வைத்து நான்கு இயல்களால் ஆனது என்பதை விளக்கியும் உள்ளது. இன்னும் இவை போன்ற பல ஒப்புமையுடைய கருத்துக்களையும் சிவஞானபோதச் சிற்றுரை விளக்குகிறது. இதனால் இவ்வாழ்த்துப் பொருளியல்பு உரைக்கிறது என்பர் சிவஞான முனிவர்.

இனி, சித்தியாரின் விநாயகர் வணக்கம் சிந்தித்தற்குரியது. அதில், சிவபெருமான் தந்தருளிய விநாயகரை வணங்கினால் என்ன பயன் கிட்டும் என்பது தெளிவுற உள்ளது. ஆறு, பிறை, கொன்றை, தாழ்சடை ஆகியவற்றை உடையவன் அருளிய ஒரு வாரணம் என்று விநாயகரைக் குறிக்கின்றார்.

"...... ... ... ஆறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
தரும் ஒரு வாரணத்தின் தாள்கள்"

என்பன அப்பொருளுடைய அடிகள். ஒரு கொம்பு, இரு செவி, மூன்று மதங்கள், தொங்கும் (நால்)வாய், ஐந்து கைகள் ஆகியனவற்றைக் கொண்டருளும் விநாயகக் கடவுள் என்று ஆனைமுகனை வருணிக்கின்றார் ஆசிரியர்.

"ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய் ஐங்கரத்தன"

என்பன அவ் அடிகள். இப்பெருமானின் திருவடிகள், பேரன்புடன் இடைவிடாமல் வணங்குவோரது அறியாமையை நீக்கி, பிரமன், திருமால் ஆகியோரது வாழ்வும் ஒரு பொருளோ என்று அதனை வெறுக்கச் செய்து, தெய்வத்தன்மை பொருந்திய வாழ்வையும் தரும் என்பது அப்பாடலின் முழுப்பொருளாம்.

"ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய் ஐங்கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
தரும் ஒரு வாரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும் வணங்கி ஓவாதே
இரவுபக லுணர்வோர் சிந்தைத்
திருகோட்டும் அயன் திருமால் செல்வமும் ஒன்
றோ என்னச் செய்யும் தேவே"

என்பது அவ்வணக்கப்பாடல். இதில் "தாழ்சடையான் தரும் ஒரு வாரணம்" என்பதனுல் சிவபெருமான் அருளிய விநாயகர் என்னும் பொருள் தெளிவாகிறது. இதற்கேற்ப இதன் முதனூலிலும் உள்ள "மலேயிலலார் அருளிய பொல்லார்" என்பதற்கு இறைவன் அருளிய பொல்லாப் பிள்ளையார் என்று பொருள் காணுதலே பொருந்துவதாகக் கருதலாம்.

இவ்வணக்கப்பாடல் தரும் தெளிபொருள் விநாயகரின் திருவடிகளை, ஒன்றிய அன்புடன் இடைவிடாமல் வணங்கினுல் அறியாமை நீங்கிப் பதவி, பொருள் ஆசைகள் ஒழிந்து பேரின்பத்தைப் பெறலாம் என்பதாகும்.

போதத்தின் மங்கல வாழ்த்து, வஞ்சித்துறை அமைப்பையும் சித்தியின் விநாயகர் வணக்கப்பாடல், எண்ணலங்கார அமைப்பையும் கொண்டிருப்பதனை உணரலாம்.

சிவஞானபோதத்தில் 'மங்கல வாழ்த்து' என்னும் தலைப்பில் ஒரே ஒரு பாடலும் பின்னே அவையடக்கமும் உள்ளது. ஆனல் சித்தியார், விநாயகர் வணக்கத்துடன் 'பரசிவ வணக்கம்' குருவணக்கம் என்பனவற்றையும் பின்னே நூல் நுதலியபொருள், பயன், கேட்போர் ஆகியனவற்றையும் கொண்டு இறுதியாக அவையடக்கத்துடன் நிறைவுறுகிறது.

(தொடரும்)

என்ன சொல்லி எளியன் வாழ்த்துவன்?

வித்துவான் திரு. தா. குருசாமி

தண்டமிழ்த் தருமை தாரணி போற்றச்
செந்தமிழ் புரக்குஞ் சீரடி போற்றிப்
பந்தனை செய்தே பரவுவன் அடியேன்!

★

ஆய்வின் மையம் திறுவிய பாங்கை
ஒய்வின் றுன்னி உபதே சித்தெமை
ஆய்வா ராக்கும் ஆங்கில ஞாயிறு!
தண்டமிழ்க் கூட்டுணும் தகைமைத் தாக்கியே
பிழைபடும் சிறுமைத் தனங்களைச் சுட்டியும்
உழையிருந் துண்மை கூறும் உறுதியும்
நல்லவை எல்லாம் கடனெனக் கொண்டே
அருள்நிதி யாகத் திருமுறைக் கடலைக்
கடைந்தமு தெடுத்தே கடைவாய் ஊட்டும்
செந்தமிழ்ப் பரமா சாரியன் முன்பு
குற்றங்கள் செய்தும் கூடிய பேற்றால்
எளியனை ஆண்ட அருமையும் மறக்கேன்!

★

ஆங்கிலமாத முதல் ஞாயிறுகள்
ஏற்றம் மிக்கன! என்னென்ன சிந்தனை?
எதனைச் சொல்வது? எல்லாம் வெல்வது!
நாயன்மார் வாழ்வின் சம்பவ மனைத்தும்
வாழ்வோ டிணைக்கும் உபதேசத் திறன்
எம்மனோர் யாரும் அளந்தறிந் துரைக்கும்
தகைமைத் தன்றாம்! குஞ்சிப் பூவாம்!

★

உபதேசப் பொழிவின் வாசகம் பலதொடர்
தமிழ்உப நிடதமாம்! காட்டுவன் சிலவே!
சொன்ன வாறறிவார் — விளக்கிய போதுதான்
அறிதலும் செய்தலோடு ஒக்கும் என்ற
''நல்லறி ஞன்செயல் படுவான்'' என்றதும்,
பொன் எடுக்கும்போது சுந்தரர் நிலையை
எம்மவர்க் குரைத்ததை இனிதாய் உணர்ந்தேன்;
பயந்து போனால் பெருமை கிட்டும்
பெரியோரிடத்துப் பெருமிதங் கொண்டால்
சிறுமை கிட்டும் திறம் அறிந்தேன் நான்
என்றே அருளித் தூதின் கதையால்
ஒன்றச் செய்தும் உணர்த்தினை பெரும!
தீட்சிதர் கொண்டை ஈசானியத்தில்
அதோகதி—கீழ்நிலை என்றசொல் விளக்கம்
இன்றைய பேராசிரியர் பலர்க்கும்
ஈங்கு வியப்பைத் தந்தன! சொன்னதால்!
உச்சமாய் நயமுடன் ஒன்று குறிப்பன்
சுந்தரர் அவர்குறை போக்கத் தோன்றினர்
ஆயினும் நம்குறை நீக்கப் பெற்றது
சுந்தரர் அவதாரம் நமக்கருள் ஈந்தது!
'மடித்தாடும்' காட்சி யாரிடம் கேட்போம்!
கண்ட காட்சியை விண்ட பாங்குதான்
'ஊன்று மலர்ப்பதம்' ஆயலா யிற்று!
'நினைப்பதே நியமம்' காட்டிய உரைக்கும்
சதாசிவ சிந்தனை எடுத்துக்காட்டாம்!
உயர்ந்த பொருளை மதித்தால் போதா;
பத்தி பண்ணிப் போற்றிப் பழகிடு
என்பன போன்ற சிரப்பொருள் பெற்றேன்!
திருக்கா ளுட்டு முள்ளூர்ச் செய்தி
மேற்கா நாட்டு ஆதனூர்ச் செய்தி
இவையெல்லாம் சைவச் சரிதம் அன்றோ?
சிம்மாந்தென்ற சொல் செம்மாப்பென்றும்
சிம்புளித்தெனுஞ் சொல் மிகக் களித்தென்றும்
உரைநலம் காட்டிய உயர்வென் சொல்வேன்?

சொல்லாய்வு - நயபி – பொருளாய்வு
'வள்' என்ற சொலலின் உண்மை பொருள்தான்
அருணை வடிவேல் தருமந் திரவுரைப்
பெருமை கேட்கப் பெருமிதம் கொண்டேன்!
பிடித்தா டிட்ட பொருள உண்மை உணர்ந்தேன்
இன்னும் பல உரை ஒளிர்ந்த ஞாயிறை
என்ன சொல்லி எளியேன் வாழ்த்துவன்?
நவராத்திரி அநுட்டித்த பெரியர் வாழ்வை
நாட்டிய பாங்கினை அன்றுதான் கேட்டேன்!

★

திருமுறைச் செய்திகளை! ஆய்வுகள் ஒருபுறம்!
எல்லாம் கொண்டே எப்படிக் காப்பேன்?
மறப்பெனும் கள்வன் பறித்து போக
எஞ்சிய போற்றி இனித்த வாழக்
குருவருள் மேலுங் கூட வணஙகுவன்!
இரவு நேரம் ஆட்சியர் சூழ்ந்ததால்
மறுநாள் பள்ளி வருவதற் காக
நீலமா மிடற்று ஆலவாய் அண்ணல்
சீலம் போற்றி வள்ளுவர் ஊர்தியில்
விடைபெரு திவண் நான்வந்து சேர்ந்தனன்!
ஒருநாள் மருவிய குருவின் வாசம்
மறவா திதனை நினைய லாயினேன்!
எழுதிய வாசகம் பொறுத்திடல் வேண்டும்!

★

முந்தைய ஞானசம் பந்தம் இதழில்
காரைக் காலில் வழங்கிய ஆசி
'அறுவகைச் சமயம்' அற்புதப் பொருட்கடல்;
சுருக்கம்–ஒப்பு–பாடம் நடத்த
வாய்ப்பா யுள்ளது வாசகர் தமக்கு!
மூலபண் டாரம் இதுதான் என்பேன்!
ஆய்வு மைய அடியிணை வணங்கி
நாளும் வாழ்த்துவன் நலம்பெறற் பொருட்டே,

ஏயர்கோன் கலிக்காமர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ.,பி.எட்.,

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 6—12—1987 ஆங்கில மாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

முதல் ஞாயிறு நமக்கு அருள்நல்கும் இனிய ஞாயிறு! குரு தரிசனமும் குருவாக்கியமும் நம்மை இன்பநிலைக்குச் செலுத்துவன அல்லவோ! உயர் தவ ஞானியாம் குருமணிகளின் அருளுபதேச ஞாயிறு, கற்றவர்க்கும் கல்லார்க்கும் உற்ற துணையாய் இருந்து உறுதி நல்குவது!

காலை 10 மணிக்குத் திருமடம் அடைந்தேன். ஸ்ரீசொக்கநாதப் பூசை நிறைந்து குருமணிகள் ஆதீனப் பண்டாரக்கட்டில் சித்ராசனத்தில் அமர்ந்திருந்தார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமணிகளைத் தரிசித்துத் திருநீறு பெற்றோம். அணிந்து மகிழ்ந்தோம். அமர்ந்தோம். திருமுறைப் பாராயணமும் நாமாவளியும் நிறைந்தன. குருமணிகள் அருளுபதேசம் தொடங்கினார்கள்.

முதலில் மாதச்சிறப்புத் திருநாட்கள் பற்றிக்குறித்தருளினார்கள். பெரியபுராணத்தில் ஏயர்கோன்கலிக்காமர் புராணத்தின்வாயிலாகச் சுந்தரர் புராணம் தொடர்ந்தார்கள். கடந்த மாதங்களில் கூறப்பட்ட சில பகுதிகளை நினைவூட்டிப் பதிகச் சிறப்புக்களை அருளித் தொடங்கியமை அப்பகுதிகளை நன்றாக விளங்கிக் கொள்ள உறுதுணையாய் அமைந்தது.

சுந்தரர் திருமுதுகுன்றத்தில் ஆற்றிலிட்ட பொன்னைத் திருவாரூர்க் கமலாலயத்தில் எடுத்துப்பரவையாருடன் திருவாரூரில் வீற்றிருக்கும் நாளில் "பாறுதாங்கிய காடரோ" என்று திருப்பதிகம் பாடினார். இப்பாடலில் "குறுங்கோட்டு இள ஏறுதாங்கிய கொடியரோ" என்ற தொடருக்கு விளக்கம் அருளினார்கள். ரிஷபத்தின் கொம்பு சிறியது - அவ்வமைப்பிலேயே ரிஷபத்தின் கொம்புகளைச் சிறியதாக வைத்துச் சிற்பிகள் உருவாக்குவர். பெரிய கொம்புகளை

வைத்தமைப்பது சரியன்று; சுவாமி இளமையுடையவர்; அவர் வாகனமாகிய ஏறும் இளமையுடையது. மேலும் சிவபெருமானுக்கு வாகனமும் ஏறு. கொடியும் ஏறு. ஏறு—தர்மத்தின் உருவம்-என விளக்கினர்கள். மேலும் சுந்தரர் திருநள்ளாறு அடைந்த போது பெரிய கோபுரம் - இராஜகோபுரம் அத்திருக்கோயிலில் இருந்திருக்க வேண்டும் என்ற கருத்தைப் பெரியபுராணத் தொடர்கொண்டு புலப்படுத்தினர்கள். திருஞானசம்பந்தர் நள்ளாறு அடைந்தபோதும் இராஜகோபுரம் இருந்ததற்குச் சான்று உண்டு. 'விண் தடவு கோபுரத்தைப் பணிந்து' என ஏயர்கோன் கலிக்காமர் (பா. 144) புராணத்தில் சான்று காட்டித் தற்போது அத்திருக்கோயிலில் இராஜகோபுரம் இன்மையைச் சுட்டினர்கள்.

இங்ஙனம் முந்தைய பகுதிகளைக் குறித்துக்காட்டிச் சுந்தரர் ஒற்றியூர் தொழுதமை முதல் திருஆமாத்தூர் அடைந்தமை வரையுள்ள பகுதிகளை விளக்கினர்கள்.

வடநாட்டுத் தலங்கள் பலவற்றையும் காளத்தியில் இருந்தபடியே நினைந்து பாடினர் சுந்தரர். பின்னர் அங்கிருந்து புறப்பட்டுப் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு ஒற்றியூர் சேர்ந்தார். திருக்கோயில் தொழுதார். எழுத்தறியும் பெருமான் திருமுன் சார்ந்தார். 'பாட்டும் பாடிப் பரவி' என்று தொடங்கிப் பதிகம் பாடினர். திரு ஒற்றியூர் பூலோக சிவலோகம் என்னும் பெருமையுடைய தலம். ஒரு காலத்தில் எல்லாத் தலங்களும் உட்பட எல்லா ஊர்களுக்கும் வரிவிதித்து அரசன் சுற்றோலை அனுப்பியபோது அரசனுக்கும் ஓலை நாயகத்திற்கும் தெரியாதபடி 'இவ்வாணை ஒற்றியூர் நீங்கலாகக் கொள்க' என்று எழுதப்பட்டிருந்தது கண்டு அவ்வூர் ஒற்றியூர் (விலக்குப் பெற்றவூர்) என்றும் பெருமான் திருப்பெயர் எழுத்தறியும் பெருமான் எனவும் வழங்கலாயிற்று. 'ஏட்டு வரியில் ஒற்றியூர் நீங்கல் என்ன எழுத்தறியும் நாட்டம் மலரும் திருநுதலார்' என இதனைச் சேக்கிழார் குறித்துக் காட்டினர். பெருமான் படம்பக்க நாதர் எனவும் வழங்கப்படுகின்றார். இறைவன் திருமேனியில் பாம்பின் வடிவம் இன்றும் உள்ளது. கலிய நாயனர் அவதரித்துப் பேறுபெற்றதும், பட்டினத்தார் அருள்பெற்றதும் இத்தலத்திலேயே ஆம். இத்தகு சிறப்புமிக்க தலத்தில் சுந்தரர் சங்கிலியாரை மணந்தார்.

அநிந்திதையார், ஒற்றியூருக்கு அருகிலுள்ள ஞாயிறு என்னும் ஊரில் ஞாயிறு கிழார் என்னும் வேளாளரின் மகளாராய்ப் பிறந்து வளர்ந்தார். சங்கிலியார் என்பது பெற்றோர் இட்டு வழங்கியபெயர். முன்னை உணர்வால் சிவபெருமான் திருவடி மறவாத சிந்தையர் ஆனர். வளர்ந்து மணப்பருவம் எய்தினர். பெற்றோர் மணம்

செய்விக்க விரும்பினர். ஒத்த குலத்தில் பிறந்தான் ஒருவன் மணம் பேசிவந்தான். ஒற்றியூர் அடைந்து சிவன் திருவருள் வழியில் நிற்கவே உறுதி பூண்டிருந்தவர் சங்கிலியார். சிவபெருமான் திருவருள் பெற்றவரே தமக்குக் கணவர் என உணர்ந்தவர் ஆதலால் மணம் பேசிவந்தவன் மாண்டான்; செய்திகேட்ட சங்கிலியாரின் பெற்ரோர்கள் திருவொற்றியூர் வீற்றிருக்கும் சிவனடிக்குத் தொண்டு செய்விக்கச் சங்கிலியாரைக் கன்னிமாடம் சேர்த்தனர். சங்கிலியார் அங்கு மலர்மாலை தொடுக்கும் முன்னைத் தொண்டு இயற்றி இருந்தார்.

திருவொற்றியூர் அடைந்த சுந்தரர், பெருமானை வழிபட்டுப் பலவகையில் அடியார் செய்யும் தொண்டுகளைக் கண்டு வணங்கிச் சென்ருர். தனித் திருப்பூமண்டபத்தில் சங்கிலியாரைக் கண்டார். ''எம்பெருமான் இருவர் பொருட்டுத் திருவருளால் இப்பிறவியினை எனக்குக் கூட்டுவித் தருளினர்; அவர்களில் ஒருத்தி பரவையார்; மற்ருெருத்தி இவள் போலும்!'' என்று கருதினர். ஊழ் வினையால் மனம் போக்கினர்; சங்கிலியாரை அடைய விரும்பினர். திருவருள் துணைவேண்டினர். இறைவன் சங்கிலியார் கனவில் தோன்றினர்.

''சாரும் தவத்துச் சங்கிலிகேள்;
சால என்பால் அன்புடையான்
மேரு வரையின் மேம்பட்ட
தவத்தான்; வெண்ணெய் நல்லூரில்
யாரும் அறிய யான்ஆள
உரியன்; உன்னை எனைஇரந்தான்;
வார்கொள் முலையாய்! நீ அவனை
மணத்தால் அணைந்து மகிழ்க''

என்ருர். சங்கிலியார் சிவபெருமான் தம் கனவிடைத் தோன்றி அருளியமொழிகேட்டு மகிழ்ந்தார்; ''சுந்தரர் திருவாரூரில்மகிழ்ந்து உறைபவர் ஆதலின் அதற்கேற்பப் பெருமான் அருளிச் செய்தல் வேண்டும்'' என வேண்டினர் சங்கிலியார்.

ஒற்றியூர்ப் பெருமான், 'வன்ருெண்டன் உன்னைப் பிரியாவகை ஒரு சபதம் செய்து கொடுப்பான்' எனச் சங்கிலியார்க்கு அருளினர். சுந்தரர்பால் அணைந்தார். சங்கிலியைப் பிரியாது உடனிருத்த லாகிய சபதம்செய்து கொடுக்க வேண்டும் என்பதை உணர்த்தினர். பல தலங்களையும் வணங்கும் விருப்புடையவர் சுந்தரர். பிரியா திருப்பேன் என்று சபதம் அளித்தல் பல தலங்களையும் அடைந்து வணங்கத்தடையாக அமையுமெனக்கருதினர். தம்பிரான்தோழராம்

சுந்தரர் தாம் சபதம் அளிக்கும்போது, திருக்கோயிலை விட்டு நீங்கி மகிழமரத்தடியில் இருக்குமாறு பெருமானை வேண்டினர். பெருமானும் இசைந்தார்.

சங்கிலியார் கனவில் பெருமான் மீண்டும் தோன்றினர்; திருவிளையாடல் விரும்பிய பெருமான் 'நம்பியாரூரன் சபதம் செய்வான்; அச்சபதத்தைத் திருக்கோயிலில் கொள்ள இசையாமல் மகிழ மரத்தின் கீழ் வந்து கொள்வாயாக' என அருளினர். சங்கிலியார் ஆனந்தக் கண்ணீர்பெருக, சேவடி தொழுதார். விழித்தெழுந்து தோழியரிடம் பெருமான் அருள் கூறினர். சங்கிலியாருக்குச் சுந்தரர் சபதம் செய்து தரும் காலம் நெருங்கிற்று. சுந்தரரிடம் சங்கிலியாரின் சேடியர் 'மகிழ மரத்தடியின் கீழ்ச் சபதம் செய்து கொடுத்தாலே போதும், இதற்காகப் பெருமான் சந்நிதிக்கும் போக வேண்டாம்' என்றனர். சுந்தரர் தடைப்படுமே என மருண்டார். பின் தெளிந்தார். மகிழ மரத்தை மும்முறை வலம் வந்து சபதம் அளித்தார். சிவபெருமான் தொண்டர்கள் கனவில் நம்பியாரூரருக்குச் சங்கிலியாரை மணமுடிக்கக் கட்டளை பிறப்பித்து மறைந்தார். தொண்டர் சூழத் திருமணம் நிகழ்ந்தது. ஒற்றியூர்ப் பெருமானை வழிபாடுசெய்து கொண்டும், சங்கிலியாருடன் இன்பம் நுகர்ந்தும் சுந்தரர் ஒற்றியூரில் தங்கியிருந்தார்.

வசந்தகாலத் தென்றல் ஒற்றியூரிலும் வந்து உலவியது! சுந்தரருக்கு, ஆரூர்த் தியாகேசர் வசந்தகாலத்தில் எழுந்தருளிவரும் காட்சி மனத்தில் தோன்றிற்று. ஆரூர்ப் பெருமானைப் பிரிவாற்றுமையால் மிக நினைந்தார். "பத்திமையும் அடிமையும் கைவிடுவான்" என்று தொடங்கி "எத்தனைநாள் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே" என்ற குறிப்புடன் திருப்பதிகம் பாடினர். பின்னர் ஒரு நாள் திருவாரூர் செல்ல எண்ணினர். ஒற்றியூர்க் கோயில் அடைந்து வழிபட்டார். புறம் போந்தார். ஒற்றியூர் எல்லையைக் கடந்தார். வாக்குத் தவறிய காரணத்தால் கண்ணொளி மறையப் பெற்ருர். திகைத்தார். சத்தியம் தவறியமை உணர்ந்தார். ஒற்றியூர்ப் பெருமானை நினைந்து பாடினர். 'அழுக்கு மெய்கொடு' எனத் தொடங்குவது அப்பதிகம். சுந்தரர், தாம் பிழை செய்தமையை அப்பாடலில் குறித்தார். பிழை செய்திருந்தாலும் பெருமான் திருவடிகளை மறவாச் சிந்தையும் வழுக்கி விழுந்தாலும் இறைவன் திருப்பெயரல்லாமல் மற்றென்றைத் தாம் கூருத் தகைமையும் பற்றி அப்பாடலிற் குறித்தருளினர். மேலும் அப்பதிகத்தின் 4 ஆம் திருப்பாட்டில்

" ஊன்று கோலெனக் காவதுஒன்று அருளாய்
ஒற்றியூர் எனும் ஊருறைவானே "

என்ற பகுதியைக் குறிப்பிட்டு, சுந்தரர் ஒற்றியூர்ப் பதியிலேயே ஊன்றுகோல் வேண்டியருளிய பான்மையை விளக்கினார்கள்.

கண்ணொளி இழந்து தொண்டர் துணைவரத் திருவாரூர் சென்று தொழக் கருதி நடந்தார். திருவட திருமுல்லைவாயில் அடைந்தார். குருமணிகள் வட திருமுல்லைவாயில் பற்றிக் குறிப்பு அருளினார்கள். சோழநாட்டில் சீகாழிக்கருகில் ஒரு முல்லைவாயில் உண்டு. இது தென்திருமுல்லைவாயில் எனப்படும். முல்லைக்கொடி தலவிருக்ஷம். தமிழ்நாட்டின்வடபகுதியில் இருப்பதுவடதிருமுல்லைவாயில். இங்கும் முல்லைவனநாதர் எழுந்தருளியுள்ளார். முல்லைப் புதரின் அடியில் சிவலிங்கமாக எழுந்தருளியிருந்ததாகத் தென்திருமுல்லைவாயில் வட திருமுல்லைவாயில் தலபுராணங்கள் கூறுகின்றன. இருதலங்களுக்கும் தலவரலாற்றில் ஒப்புமை காணப்படுகின்றது. தென்திருமுல்லைவாயில்பெருமானை ஞானசம்பந்தரும் வடதிருமுல்லைவாயில்பெருமானைச் சுந்தரரும் பாடியுள்ளனர். சுந்தரர் வடதிருமுல்லைவாயில் அடைந்து தொழுது "திருவும் மெய்ப்பொருளும்" எனத் தொடங்கிப் பதிகம் பாடினார். தம் நிலைகுறித்து வருந்தி இறையருள் வேண்டியதாக அமைந்துள்ளது. "படுதுயர்களையாய் பாசுபதா பரஞ்சுடரே" என்ற அடைவு கொண்டு ஒவ்வொரு பாடலும் அமைந்துள்ளது.

இப்பதிகத்தின் மூன்றும் பாடலில் "சங்கிலிக்கா என்கண் கொண்ட பண்ப!" என்ற தொடர் அகச்சான்றாக அமைந்துள்ளது. திருமுல்லை வாயிலிலிருந்து திருவெண்பாக்கம் அடைந்தார். தற்போது இத்தலம் சத்யமூர்த்திசாகர் எனப்படும் பூண்டி நீர்த் தேக்கத்தில் மறைந்துள்ளது. தண்ணீர் இல்லாத போது கோயில் தெரியும். திருக்கோயில் திருமுன்புசென்ற சுந்தரர் "திருக்கோயிலில் உள்ளீரோ?" என வினவினார். வெண்பாக்கத்து இறைவர் ஊன்று கோல் அருளினார். இணக்கமற்ற மொழியால் "உளோம் போகீர்" என்றார். நம்பிகள் "பிழையுளன பொறுத்திடுவர்" எனத் தொடங்கும் பதிகம் பாடிப் போற்றினார். அப்பதிகத்தின் பாடல்களில் இந் நிகழ்ச்சியைக் குறித்தருளினார். பெருமானை வணங்கி ஏத்தினார். பழையனூர் அடைந்தார். பழையனூர்த் திருவாலங்காடு காரைக் காலம்மையார் திருத்தலையாலே வலங்கொண்ட பதி. ஆதலின் அதனை மிதியாது தலத்தின் அருகில் இருந்தவாறே "முத்தாமுத்தி தரவல்ல முகிழ்மென் முலையாள் உமைபங்கா" எனத் தொடங்கிப் பதிகம் பாடிப் பரவினார். திருவூறல் என்ற பதி தொழுது வணங்கிக் காஞ்சிபுரம் அடைந்தார்.

திருக் காமக்கோட்டம் நண்ணி வணங்கினார். கச்சி ஏகம்பரைப் பணிந்தார். "கடையானேன் எண்ணாத பிழைபொறுத்து இங்கு யான் காண எழிற்பவள, வண்ணா! கண் அளித்தருளாய்" என

வேண்டி வணங்கினர். பெருமான் இடக்கண் பார்வை அளித்தருளினர். மங்கையை இடப்பாகம்கொண்டருளித் தமக்குஇடக்கண் பார்வை தந்தருளிய பெருமான் கருணையைப் போற்றினர் சுந்தரர். "ஆலந்தானுகந்து அமுது செய்தானை" என்று தொடங்கிப் பதிகம் இசைத்தருளினர். நாள்தோறும் பெருமானைத் தொழுது அப்பதியிற் சிலநாள் தங்கியிருந்தார். ஆரூரான் அடிக்கமல நினைவுதோன்றிற்று. "அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி" எனத் தொடங்கித் "தென் திருவாரூர்ப் புக்கு எந்தை பிரானரை என்று கொல் எய்துவதே" என்ற அடைவுடன் பதிகம் பாடினர். குருமணிகள் இப்பதிகப் பாடல் விளக்கம் அருளினர்கள். அஞ்சுபதம் - பஞ்சாட்சரம். ஒவ்வொரு எழுத்தும்ஒவ்வொரு பொருள்தரலால் அஞ்செழுத்தும் அஞ்சுபதம் ஆகின்றது என இனிய விளக்கம் அருளி மகிழ்வித்தார்கள். சுந்தரர் ஆரூர் செல்லும் நோக்குடன் புறப்படலானர். திருஆமாத்தூர் அடைந்தார். "காண்டனன் காண்டனன்" எனத் தொடங்கி ஒவ்வொரு பாடலிலும் அடுக்குத் தொடர் அமையத் தம் அன்பின் மிகுதியைப் புலப்படுத்துப் பதிகம் பாடினர். தொண்டை நாட்டிலிருந்து நீங்கி நடுநாடு அடைந்தார்.

நடுநாடு அடைந்தமை வரை அன்றைய அருளுபதேசமாக அமைந்தது. தொண்டை நாட்டுத் தலங்களின் பெருமை, பதிகப் பாடல் கருத்து விளக்கம், பாடல்களில அமைந்த சைவசித்தாந்தக் கூறுகள் ஆகியவற்றை நன்கு விளங்குமாறு உபதேசித்தார்கள்.

உபதேசம் நிறைந்தது. பனிக்காலத் தொடக்கம் ஆகையால் சூடான தேநீர் வழங்கப் பெற்றது. பருகி மகிழ்ந்தோம். இனிய உணர்வுகளோடு இல்லம் ஏகினேம்.

திருவடியின் நெறிபிறழாத் திருநாவ லூரரருட்
பெருமைதனை உரைத்தருளும் குருமணியின் தாள்போற்றி!

வாழ்க குருமணிகள்!

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் சிவதலச்சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. பிரபவ – கார்த்திகை ஆயில்யத் திருநாள் 10—12—87 வியாழக்கிழமை காலை திருவிடைக்கழி, முருகப் பெருமான் திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடு நிகழ்ந்தது. குராப்பள்ளி என்று சங்க நூல்களில் குறிக்கப்பெறும் இத்தலத்து முருகப் பெருமானைச் சேந்தனர் திருவிசைப்பாப் பாடிப் போற்றியுள்ளார். முருகப் பெருமான், சூரபன்மனைச் சங்கரிக்க, சிவபெருமானிடம் விடைபெற்றுச் சென்ற தலம் எனக் குறிக்கப் பெறும் சிறப்புடையது. இத்தகைய சிறப்பு மிக்க தலத்தின் பெருமைகளை விளக்கும் வகையில் மாத ஜன்ம நட்சத்திர விழா மலராகத் 'திருவிடைக்கழி தலச் சிறப்பும் திருவிசைப்பா திருப்புகழ் முதலிய தோத்திரங்களும்' என்னும் நூல் வெளியிடப் பெற்றது. தருமை ஆதீனப் புலவர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., தலச் சிறப்புக்களை விளக்கி உரையாற்றினர். அன்பர்கள் வழிபட்டுப் பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கிலமாத முதல் ஞாயிறு தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு, அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைக் கூட்டம் நிகழ்கின்றது. இம்மாதம் 79 ஆம் அருளுபதேசம் 3—1—88 அன்று திருமுறைப் பாராயணத்துடன் தொடங்கி நடைபெற்றது.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருத்தொண்டர் புராணத்தின் வாயிலாக சைவசித்தாந்த சமயநெறி விளக்கம் அருளிச்செய்கின்றார்கள். இம்மாதம் ஏயர்கோன்கலிக்காமர் புராணத்தில் அமைந்த சுந்தரர் வரலாற்று விளக்கம் அருளினார்கள். ஒற்றியூரில் சங்கிலியாரை மணந்த சுந்தரர் அங்கிருந்து புறப்பட்டுத் திருவெண்பாக்கம் அடைந்ததுமுதலாகப்பலதலங்களையும் தரிசித்துக் கொண்டு திருவாரூர் எய்தியமைவரை அன்றைய அருளுபதேசத்தில் குறித்தருளினார்கள். தலச்சிறப்புக்கள், பதிகப்பாடல் நயங்கள், பதிகப்பாடல்களில் அமைந்த சித்தாந்த நுட்பங்கள் முதலியவற்றை மனங்கொள விளக்கி உபதேசித்தார்கள்.

மயிலாடுதுறை அன்பர்களும் ஆசிரியர்களும் அலுவலர்களும் மாணவர்களும் கலந்துகொண்டு பயனுற்றனர். அடுத்து எண்பதாம் அருளுபதேசம் 7—2—88 அன்று நடைபெறும். அன்பர்கள் கலந்து கொண்டு பயன்பெறுவார்களாக.

திருப்பொன்னூசல் விழா

வேளூரில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்திய நாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ தையல்நாயகி உடனுகிய ஸ்ரீ வைத்தியநாத சுவாமிக்கு மார்கழித் திங்கள் 11 ஆம் நாள் (26—12—87) சனிக்கிழமைமுதல் பத்துநாட்கள் திருப்பொன்னூசல் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. இந்நாளில் பெருமானையும் பெருமாட்டியையும் திருப்பொன்னூசலில் எழுந்தருளச் செய்து சிறப்பாக வழிபாடுகள் நிகழ்த்தப் பெற்றன. திருவெம்பாவைப் பாடல்கள் ஓதப் பெற்றன. 4—1—88 திங்கட்கிழமை திருவாதிரைத் திருநாளன்று ஸ்ரீ நடராசப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் தரிசனமும் நடைபெற்றன. அன்பர்கள் தரிசித்துப் பயனடைந்தனர்.

சீகாழியில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் 26—12—87 சனிக்கிழமை முதல் பத்து நாட்கள் ஊஞ்சல் - திருவெம்பாவை உற்சவம் சிறப்பாக நடை பெற்றது. திருவெம்பாவை ஓதப் பெற்றது. நாள்தோறும் மாலையில் சுவாமி, அம்பாள் வலம் வருதலும், காலை, மாலை இருவேளைகளிலும் பிராகாரத்தில் ஸ்ரீ மாணிக்கவாசகர் வலம் வருதலும் ஓதுவாமூர்த்தி கள் திருவெம்பாவை ஓதத் தீபாராதனை நிகழ்தலும் ஆகியன சிறப்பாக நடைபெற்றன. 3—1—88 ஞாயிறன்று இரவு திருவாசகத்தின் ஒருபகுதியாகிய திருப்பொன்னூசல் ஓதப்பெற்றுத் தீபாராதனை நிகழ்ந்தது. திருவாதிரை நாளில் ஸ்ரீ நடராசப் பெருமான் திருவீதியுலாக்காட்சி சிறப்பாக நடைபெற்றது.

கார்த்திகை ஞாயிறு தீர்த்த விழா

கருங்குயில்நாதன்பேட்டையில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான கருங்குயில்நாதன் பேட்டை அருள்மிகு ஆனந்தவல்லி உடனுய அருள்மிகு சக்திபுரீசுவரர் திருக்கோயிலிலிருந்து கார்த்திகை ஞாயிறு தோறும் சுவாமி அம்பாளுடன் தருமபுரத்தின் காவிரி வடகரைக்கு எழுந் தருளித் தீர்த்தம் கொடுத்தருளும் விழா சிறப்பாக நடைபெற்றது. மயிலாடுதுறையைச் சார்ந்த பக்தர்கள் இவ்விழாவிற் கலந்து கொண்டு தீர்த்தமாடியும் தரிசித்தும் பயன்பெற்றனர்.

குத்தாலத்தில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான குத்தாலம் என வழங்கும் திருத்துருத்தி அருள்மிகு அரும்பன்ன வனமுலையம்மை உடனுகிய

அருள்மிகு சொன்னவாறு அறிவார் கார்த்திகை ஞாயிறு தோறும் அம்பிகையுடன் காவிரிக்கு எழுந்தருளித் தீர்த்தம் கொடுத்தருளும் விழா சிறப்பாக நடைபெற்றது. அன்பர்கள் தீர்த்தமாடியும் தரிசித்தும் பயன் அடைந்தனர்.

திருக்கடவூரில் சங்காபிஷேகம்

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்த கடேசுவரர் சுவாமி தேவஸ்தானத்தில் கார்த்திகைச் சோமவார நாட்களில் 1008 சங்காபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குச் சங்காபிஷேக தீர்த்தம் மற்றும் பிரசாதம் வழங்கியருளினார்கள்.

காவிரி முதலிய புண்ணிய தீர்த்தங்களைக் கொணர்ந்து அத் தீர்த்தத்தில் இருநூற்றைம் பதுக்கு மேற்பட்ட பொருள்களைக்கலந்து சங்குகளில் நிரப்பி வரிசையாக அமைத்து நடுவில் பீடத்தில் வலம்புரிச் சங்கை வைத்து வேள்வி முதலியவற்றால் பூசித்துத் தீர்த்தத்தை முறைப்படி பெருமானுக்கு அபிஷேகம் செய்வது சங்காபிஷேகம் ஆகும். இவ்வாறு சங்காபிஷேகம் செய்வதால் உலகநலம் உண்டாகும்.

தென் திருமுல்லைவாயில் ஸ்ரீ முல்லைவனநாதர் திருக்கோயில் திருப்பணித் தொடக்கவிழா

சீகாழிக்கு அருகில் உள்ள தென் திருமுல்லைவாயில் திருக் கோயில் சிறப்புக்கள் மிக்க சிவ தலம். திருஞானசம்பந்தர் வழிபட்டுப் பதிகம் இசைத்த சிறப்பினது. திருநாவுக்கரசர் வைப்புத் தலமாக அமைத்துப் போற்றிய தலம். இத்தலத்தில் ஸ்ரீ அணிகொண்ட கோதையம்மையுடனாகிய ஸ்ரீ முல்லைவனநாதர் எழுந்தருளி அருள் பாலிக்கின்றார். பெருமை மிக்க இத்தலத்து மூர்த்திகளுக்கு மருந்து சாத்தியும் விமானங்களுக்கு வண்ணம் தீட்டியும் திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகம் செய்விக்க வேண்டும் என்பது தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுள்ளம். திருவுள்ளக் குறிப்பின் வண்ணம் உள்ளூர் அன்பர்களும் வெளியூர் பக்தர்களும் திருப்பணி செய்வதற்கு மனமுவந்து முன்வந்துள்ளனர். திருக் கோயில் திருப்பணித் தொடக்க விழா கார்த்திகை 23 ஆம் நாள் 9—12—87 புதனன்று காலை நடைபெற்றது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றித் திருப்பணியைத் தொடங்கி வைத்து அருளாசி வழங்கினார்கள். அன்பர்கள் பலர் விழாவிற் கலந்து கொண்டு தரிசித்துப் பயன் பெற்றனர்.

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்துடன் இணைந்த இத்திருக்கோயில் திருப்பணிகள் அனைத்தும் அன்பர்களின் நன்கொடைப் பணிகளாகவே நடைபெறுகின்றன. அவரவரும் தம்மால் இயன்ற திருப்பணியை ஏற்று, நிறைவு செய்து ஸ்ரீ முல்லைவனநாதர் திருவருள் பெற்று உய்வார்களாக.

பல்வகைச் சைவம் கருத்தரங்கம்

தருமை ஆதீனம் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனமும் தமிழ்நாடு தத்துவப் பேராசிரியர் கழகமும் இணைந்து நிகழ்த்திய "பல்வகைச் சைவம்" பற்றிய கருத்தரங்கம் தருமபுரம் ஆதீனத்தில் டிசம்பர் 19, 20 ஆகிய இரு நாட்களும் சிறப்பாக நடைபெற்றது. ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் திரு. டி. என். இராமச்சந்திரன் அவர்கள் வரவேற்புரை நல்கினர். 19—12—87 காலை தருமை ஆதீன 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரையும் தொடக்கவுரையும் வழங்கியருளினார்கள். வடலூர் ஊரன் அடிகள் முதன்மையுரை நிகழ்த்தினார்கள். வீரசைவம் பற்றி முதல் அமர்வு சென்னைப் பேராசிரியர் டி. என். கணபதி அவர்கள் தலைமையில் நிகழ்வுற்றது. 19—12—87 பிற்பகல் டாக்டர் திரு. டி. என். கணபதி அவர்கள் தலைமையில் இரண்டாம் அமர்வில் டாக்டர் திரு. சி. ஆர். நரசிம்மன் அவர்களும் பேராசிரியர் திரு. சி. நாகராஜன் அவர்களும காஷ்மீர் சைவம், வீரசைவம் பற்றிக் கட்டுரை வாசித்தனர். மூன்றும் அமர்வில் டாக்டர் திரு. எஸ். ஓ. இராமகிருஷ்ணன் தலைமையில் பாசுபதசைவம் பற்றி இயக்குநர் திரு. டி. என். இராமச்சந்திரன் அவர்கள் கட்டுரை வழங்கினர். டாக்டர் திரு. எஸ். ஓ. இராமகிருஷ்ணன் தலைமையில் மாணவர் அரங்கில் சென்னைப் பச்சையப்பர் கல்லூரி, திருச்சி தேசியக் கல்லூரி, தருமபுரம் தமிழ்க் கல்லூரி மாணவ மாணவியர் பல்வேறு தலைப்புக்களில் கட்டுரை வாசித்தனர். 20—12—87 ஞாயிறு காலை நான்காம் அமர்வு டாக்டர் திரு. எஸ். ஓ. இராமகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நிகழ்வுற்றது. ஆய்வு நிறுவன இயக்குநர் திரு. டி. என். இராமச்சந்திரன் அவர்கள், மதுரை டாக்டர் எஸ். கங்காதரன் அவர்கள் காளாமுக சைவம் பற்றிக் கட்டுரை வாசித்தனர். ஐந்தாம் அமர்வு, முதுபெரும் புலவர் மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார் தலைமையில் நிகழ்ந்தது. டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்களும் டாக்டர் திரு. சு. சாமிஐயா அவர்களும் சைவசித்தாந்த தத்துவமும் வரலாறும் பற்றிக் கட்டுரை வாசித்தனர். நிறைவுரை மகாவித்துவான் சி. அருணைவடிவேலு முதலியார் அவர்களால் வழங்கப்பட்டது. ஆய்வு நிறுவனப் பதிவாளர் நன்றியுரையுடன் கருத்தரங்கம் இனிது நிறைவுற்றது.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்

(பிரபவ ஹூ தைமீ 1உ முதல் 29உ முடிய)

(15—1—1988 முதல் 12—2—1988 முடிய)

பிரபவ ஹூ மார்கழி மீ 30உ குருவாரம் விசாக நக்ஷத்திரம் பவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 40 நாழிகை 39 விநாடிக்குக் கன்னியா லக்கினத்தில் விருச்சிக ராசியில் ஸ்ரீலோக ரட்சகரான சூரிய பகவான் உலக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு தனுர் ராசியிலிருந்து மகர ராசி சங்கிரமணமாகத் தை மாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். மறுதினம் சுக்கிரவாரம் தைமாதம் 1உ உத்ராயண புண்ணிய காலம். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் ஈஸ்வர தூதுவர்களாக வந்து சிவராஜ யோகத்தில் திருவீற்றுள்ள சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள ஜெகத்குருமகான்கள் லோகமாந்தர்கள் சைவசித்தாந்த உயர்ஞானம் பெறும் பொருட்டு, பல இடங்களில் உயர் மையக்கல்வி ஸ்தாபனங்கள் நிறுவும்படி அனுக்கிரகித்து அருள்வார்கள்.

குறிப்பு :- 1. குருப்பெயர்ச்சி 31—1—1988 காலைமணி 7-53.
2. சனிப்பெயர்ச்சி 11—2—1988 காலைமணி 11-33

ஸ்ரீபிரபவ ஹூ தைமீ 17உ பானுவாரம் (31—1—1988) திருவாதிரை நக்ஷத்திரம் அன்று சூரிய உதயம் முதல் 3 நாழிகை 2 விநாடிக்கு, காலை ஸ்டாண்டர்டு மணி 7-53க்குக் கும்ப லக்கினத்தில் ஸ்ரீ குருபகவான் மீன ராசியிலிருந்து மேஷ ராசியில் பிரவேசம் செய்கிறார். அவர் மேஷத்திலும அதிகாரப்பெயர்ச்சியில் ரிஷபத்திலும் இருந்து பின் வக்கிரத்தில் பூர்வ ராசியாகிய மேஷத்திற்கு வருவார். அந்த ராசிகளின் எதிர் ராசிகள் துலா விருச்சிகங்கள் மழைகால ராசிகளானதால் அவர் மேஷ ரிஷபங்களில் சஞ்சரிக்கின்ற பார்க்க ஸ்திடமானமாகிய வருஷத்தில் லோகத்தில் நல்ல மழைபெய்து பூமியெல்லாம் செழிக்கும.

குருபலனால் உலகில் மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, மீனம் இந்த ராசியுடையோருக்கு தனம், குடும்பநலம், எதிலும் இலாப பிராப்தி. பொன் மணி பூஷணாதிகள் பிராப்தி, விவாக பிராப்தி, புத்திர பிராப்தி, உத்தியோகம், பதவி உயர்வு ஆகிய நற்பலன்களை

அளிக்கும். மேஷம், ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், கும்பம் இவ்விராசியையுடையோருக்கு மத்திம பலனாக நடக்கும். குருபிரீதி செய்க.

சனிப்பெயர்ச்சி :- தைமீ 28உ குருவாரம் (11—2—1988) அனுஷ நக்ஷத்திரம் அன்று சூரிய உதயம் முதல் 12 நாழிகை 15 விநாடிக்கு, காலை ஸ்டாண்டர்டு மணி 11-33 க்கு மேஷலக்கினத்தில் ஸ்ரீ சனிபகவான் விருச்சிக ராசி கேட்டை நக்ஷத்திரம் 4 ஆம் பாதத்திலிருந்து மூலம் முதல்பாதம் தனூர் ராசியில் பெயர்ச்சியாகின்றார். அவர் அந்த ராசியில் தனது மந்தகதி சீக்கிரகதி ஆண்டுக்கொரு வக்கிர கதியாக $2\frac{1}{2}$ ஆண்டுக்காலம் சஞ்சரிப்பார்.

பரிகாரம் :- சனீஸ்வர அஷ்டோத்திர அருச்சனை செய்து வருதல் சனீஸ்வர சன்னதியில் திலதீபம் ஏற்றுதல், நவக்கிரக பிரதட்சனம் செய்து வணங்கிவருதல் ஆகிய உறுதிபக்தியில் சகல க்ஷேமங்களும் உண்டாவது திண்ணம்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

மேஷ ராசி 9 பாதங்களும் சுபப் பலன்தரும். பணவருமானம் வந்துசேரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் புகழ் மேலிடும். உயர்பதவிதரும். அரசாங்கத்தில் நல்லன ஏற்பட்டுவரும். வழக்கில் ஜெயம் ஏற்படும். வீடு வாகனபிராப்தியில் நல்ல சௌகரியம் இருந்துவரும். பிப்ரவரி 5உக்கு ஓர் விசேஷ நற்செலவை ஏற்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஜனவரி 15, 16 தேதிகள் பிப்ரவரி 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ - உரோகிணி - மிருகசீரிஷம் $\frac{1}{2}$

ரிஷப ராசி 9 பாதங்களும் மிக்கிரபலனாக நடக்கும். பணவருமானம் வந்துகொண்டிருக்கும். பிப்ரவரி 5உக்கு வீடுமனையில் நல்லன ஏற்படச்செய்யும். பொதுநலன்கள் பேணும். சனீஸ்வர அஷ்டோத்திர அருச்சனை செய்ய சகல நன்மைகளும் ஏற்படும். ஆயுட்பலம் தரும். நல்விஷய ஆராய்ச்சி வேதாந்தங்களில் மனம் தீக்ஷண்யமாகும். ஜனவரி 17, 18 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிதுன ராசி 9 பாதங்களும் சுபபலன்தரும். பணவருமானம் தரும். கல்வி கலைகளில் வியாபாரம் தொழில்களில் அரசாங்க நன்மைகளை ஏற்படுத்தும். புத்திரர் பௌத்திரர்களுக்கு சுபம் நிகழும். வாகனபிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சி நிலவும். எல்லாக்காரியங்களும் நன்முறையில்

செயல்பட்டுக்கொண்டிருக்கும். ஜனவரி 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பணவருமானம் கணிசமாகவரும். வாகன பிராப்தியில் நல்ல அனுபோகம்தரும். பிப்ரவரி 11ம் தேதி ஆனல் அரியபெரிய விஷயங்களில் நன்மை உண்டாகுதலும் காரிய சாதனைகளும் ஏற்படும். ஸ்ரீமேதா தக்ஷிணாமூர்த்தி சுவாமிக்கு அபிஷேக ஆராதனை செய்துவர, கீர்த்தியான நற்செயல்களைச் செய்விக்கும். சமூகத்தில் புகழ் ஏற்படும். தாரபுத்திரர்களுக்கு சௌக்கிய பலன் தரும். ஜனவரி 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் சுப பலனாக நடக்கும். நல்ல பண வருமானம் வரும். பிப்ரவரி 5 தேதிக்கு வீடுமனைகளில் விசேஷ பலனை ஏற்படுத்தும். இயந்திரம் அல்லது ஓர் நவீன சாதனம் உபயோகத்துக்கு வரும். அரசாங்கத்தில் எழுத்து மூலங்களில் நன்மைகள் ஏற்படச்செய்யும். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். எல்லாக்காரியங்களையும் திடசித்தமாகச் செய்தல் ஆகும். ஜனவரி 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் கணிசமாகவரும். வித்தியா வியாபாராதிகளில் கலைத் துறையில் முன்னேற்றம் ஏற்படும். பூமியில் இயந்திரங்களில அபிவிருத்தி ஏற்படும். பெரியோர் சான்றோர்களிடம் அறிவுரைகள் பெறுதல், தர்ம ஸ்தாபனம் நிருவகிக்கும் பொறுப்பு ஏற்படுதல் ஆகும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஜனவரி 25, 26, 29 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி -விசாகம் ¾

துலா ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் சாசுவதமாக உள்ளது வரும். உறுதிப்பாடான வார்த்தைகளில் கௌரவம் தரும். வீடு வாகனங்களில் நல்ல சௌகரியம் இருந்துவரும். விரோதங்கள் நீங்கும். புத்திரர்களுக்குச் சுபம்தரும். தாம்பத்திய வாழ்க்கை தானதர்மங்களுடன் பக்தியில் நடந்துவரும். எல்லாக்காரியங்களும் கௌரவப்போக்கிலேயே நடந்துகொண்டிருக்கும். ஜனவரி 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும், பணவருமானம் வந்துகொண்டிருக்கும். நல்ல பூஷணங்கள் தரும். வாகன சுகம் திருப்தியளிக்கும். இலட்சியப் போக்கில் எல்லாக்காரியங்களையும் செய்யும். தெய்வபலம் எல்லாவற்றிலும் இருந்துவரும். குருகிரக பிரீதி செய்க. ரோகம் நிவர்த்தியாகும். புத்திர சௌக்கியமும் நன்மதிப்பும் ஏற்படும். தாமபத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஜனவரி 30, 31 பிப்ரவரி 1 இத்தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பண வருமானம் தரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் நல்லன ஏற்பட்டுக்கொண்டிருக்கும். பூஷணங்களின் பிராப்தி, வாகன பிராப்தியை யளிக்கும். தொழில் துறைகளில் அரசாங்க நன்மை ஏற்படும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். பிப்ரவரி 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பண வருமானம்வரும். முன்வரவேண்டியவைவரவாகிக்கொண்டிருக்கும். பூமியில் இயந்திரங்களில் விருத்திபலன் ஏற்படும். உடல் நலம் பாதிக்கினும் உடன் வைத்தியத்தால் குணமாகும். எல்லாக்காரியங்களும் தெய்வபலத்தில் நல்லவிதமாக நடத்துகொண்டிருக்கும். தாரபுத்திரர்களுக்கு சௌக்கிய பலன்தரும். பிப்ரவரி 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்ப ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பண வருமானம் வந்து கொண்டிருக்கும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் விளம்பரம், அரசு உத்தரவு நிறைவாகுதல் ஆகியவைகளில் செலவு ஒருபுறம் இருப்பினும் ஆதாய பலன்தரும். நூதன வஸ்து ஒன்று வாங்குதல் ஆகும். பூமியில் இயந்திரங்களில் விருத்திபலன்தரும். எல்லாக்காரியங்களும் வெற்றியாகநடக்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். பிப்ரவரி 6, 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் சுபபலனை நடக்கும். பணவருமானம் கணிசமாக வந்து நிறையும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் அரசாங்கப் புகழும் அழைப்பு வருதலும் ஆகும். டாம்பீகம் அல்லது வைராக்கியப் போக்கில் சுபகாரியங்களை ஏற்கும். ஜீவனோபாயம் அல்லது தொழில் துவங்குதலில் பிப்ரவரிமுதல் நல்ல ஏற்பாடு நடக்கும். புத்திரகிலேசம் நீங்கும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம்நிலவும். பிப்ரவரி 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

அனைத்துலக சைவசித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்
இதழ்வழிச் சைவசமயக்கல்வி-III
பாடம்-12.

சங்கற்ப நிராகரணம்

சைவசித்தாந்தக் கலாநிதி
திரு. டி. என். இராமச்சந்திரன்

"செயறீர்ந்த செம்பொருளின் நாட்டம் மிக்குச்
செய்கின்ற வேள்வி யிந்தச் சிறிய வாழ்வு"

வாழ்வு ஒரு வேள்வி; இவ்வேள்வியான் ஆய பயன் மெய்ப்பொருளை அடைதல். மெய்ப்பொருள் சிவமே.

உண்மை நாட்டம் உறுதி கூட்டும். தவறான பார்வைகள், தவறான தர்சனங்களுக்கு நம்மை இட்டுச் செல்லும். தர்சனம் என்பது மதம் அல்லது சமயம் என்ற பொருள் பயக்கும் சொல்.

"உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்
சவலைக் கடலுள்" நம்மை வீழ்த்தும்.

ஆகவே உண்மைச் சமயம் பற்றிய தெளிவு வேண்டப்படுகிறது. உண்மையோடு சிவணி நில்லாக் கொள்கைகளை இனங்கண்டு கொள்ள வேண்டும். இதற்கு உதவுவன சிவஞான சித்தியாரும், சங்கற்ப நிராகரணமும்.

பழிப்பதோ, இழிப்பதோ நம்முடைய சந்தான குரவர்களின் கருத்துமன்று, கடனுமன்று. அவர்களின் கருத்து மெய்யினை உணர்த்துதலே. உணர்த்த உணர்வது ஆன்மா.

"தெய்வம் யாவும் உணர்த்திடும் தெய்வம்
தீமை காட்டி விலக்கிடும் தெய்வம்"

என்று மகாகவி பாரதியார் கூறியுள்ளார். தவறான சங்கற்பத்தினால் தீமை விளையும். ஆகவே அதை நிராகரணம் செய்ய வேண்டிய அவசியம் பற்றி எழுந்த அருள் நூல் சங்கற்ப நிராகரணம் ஆகும்.

உமாபதி தேவநாயனார் அருளிய சங்கற்ப நிராகரணம் கி. பி. 1313 இல் தோன்றிய நூல். சங்கற்பம் என்ற சொல், கருத்து - கொள்கை - எண்ணம் - அபிப்பிராயம் என்ற பொருளைத் தரும்,

பிறரது சங்கற்பங்கள் முடிந்த முடிபு அன்று என்று மறுக்கப்படுதலே நிராகரணம் என்று வழங்கப்படுகின்றது. உண்மையற்றன நிராகரிக்கப்படுங்கால் உண்மை தானாகவே நிலைபெறுகிறது.

சங்கற்ப நிராகரணம் என்ற பெயரில் மறைஞானசம்பந்தர் அருளிய நூல் ஒன்று உண்டு இவர் அருள்நந்திசிவாசாரியரின் மாணாக்கர் அல்லர். (இவரது நூல் ஒன்றை மறுத்துத் தருமை ஆதீன ஸ்தாபகரான குருஞானசம்பந்தர் "முத்தி நிச்சயம்" என்ற நூலை அருளினார்.) இம் மறைஞானசம்பந்தரும் உமாபதிசிவாசாரியர் நிராகரித்த ஒன்பது வகைச் சங்கற்பங்களில் மாயாவாதம் நீங்கலாக, ஏனைய எட்டினையும் நிராகரித்து உள்ளார்

உமாபதி தேவநாயனார் அருளிய சங்கற்ப நிராகரணம் ஞானப் பிரகாச தேசிகர் உரையோடும் ஏனைய மெய்கண்டசாத்திரங்களின் மூலத்தோடு கூடிய உரையோடும் "சித்தாந்த சாத்திரம்" என்ற பெயரில் 1934 இல் சைவ சித்தாந்த மகாசமாஜத்தால் வெளியிடப் பட்டது. 1953இல் பழைய உரையோடு இந்நூலைத் திருவாவடுதுறை ஆதீனம் வெளியிட்டது. மேலும் 1958 இல், "சங்கற்ப நிராகரணம் சார்புக் கட்டுரை" என்ற பெயரில் மேற்படி ஆதீனம் இந்நூலை வெளியிட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. 1963 இல் தருமை ஆதீனம் இந்நூலை, கா. சு. பிள்ளை அவர்களின் தெளிவான உரையோடு வெளியிட்டுள்ளது. 1968 இல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் மூலமும் உரையுமாக இந்நூலை வெளியிட்டது. இந்நூலுக்கான ஆங்கில வாக்கம் ஒன்று மட்டுமே உண்டு. இதைச் செய்தவர் நல். முருகேச முதலியார் ஆவர். இவ்வாங்கில வாக்கம் 1976இல் தருமை ஆதீனத்தால் வெளிக்கொணரப் பட்டது.

ஆசிரியப்பாவினால் ஆன இந்நூல் 1,049 வரிகள் கொண்டது நூலின் முடிவில் ஒரு வெண்பாவும் உண்டு.

விநாயகருக்கு வணக்கம் கூறி இந்நூல் தொடங்குகின்றது. நூற்காரண விளக்கம் பற்றி அடுத்து வரும் பகுதி பேசுகின்றது. இந்நாளில் நிகழ்வுறும் கருத்தரங்கம் போல, கி. பி. 1313இல் தில்லையில் ஆனித் திருவிழா ஆறும்நாளில் ஓர் தத்துவ ஆய்வரங்கம் நிகழ்ந்ததாகத் தெரிகிறது. இத்தத்துவ ஆய்வு அவையினில் ஆராயப்பட்ட விடயங்கள், விவாதங்கள், முடிபுகள் இந்நூலுள் இடம் பெறுகின்றன. முடிந்த முடிபு சைவ சித்தாந்தமே என்று இந்நூல் முடித்துக் காட்டுகிறது. சைவசித்தாந்த விளக்கம் இங்குத் தனியாகக் கூறப்படவில்லை. என்றாலும் அதன் உண்மை "சிவப் பிரகாசம்" என்னும் நூலால் அறியக்கிடக்கின்றது என்று இந்நூல் அறிவிக்கின்றது. இச்சிவப்பிரகாசம் உமாபதிதேவ நாயனார்

அருளிய நூல். இது, சங்கற்ப நிராகரணம் தோன்றுவதற்கு எழு ஆண்டுகளுக்குமுன்பே வரையப்பட்டுப்பெரும் புகழோடுவிளங்கிற்று என்பது அறிஞர்களின் துணிபு.

''வெண்ணெயம் பதிதிகழ் மெய்கண் டவன் அருள்
உள்நிலை உடையோன் ஒருவன் உரைத்த
தவப்பிர காசத் தன்மையில் விரித்த
சிவப்பிர காசச் செழுந்தமிழ் உண்மையை
அருளுடன் ஆய்ந்து கொள்ளத்
திருவருள் வினவல் திருந்திடும் அன்றே.''

''திருந்திய அருந்தவம்'' என்று தொடங்கும் இந்நூல் ''திருந்திடும்'' என்று முடியும் பாங்கு உன்னி உன்னி மகிழற்பாலது.

மாயாவாதம் நீங்கலாக ஆய்வுக்கு மேற்கொள்ளப் பட்டவை பெருமளவு சைவசித்தாந்தத்துடன் ஒத்து இயல்வன. குறிப்பாக, சுத்த சைவம் சைவசித்தாந்தத்துடன் மிகமிக நெருங்கிய தொடர்பு உடையது. ஆகவே இவை முற்றிலுங் கண்டிக்கப் படவில்லை.

அவ்வம்மதமும் தனிச் சிறப்புடையது என்ற கொள்கையை இந்நூல் வலியுறுத்துகிறது. ''ஆறும் மாறு வீறுடைத்து'' என்கிறார் நூலாசிரியர். என்றாலும் திருவருளோடு முற்றுமாய்க் கலுலிய மதம் சைவ சித்தாந்தமே. உண்மை என்பதில் ஊன்றிநின்று அதனினும் விலகாது இருப்பது சித்தாந்த சைவமே. ஆகவே, அது ''நீங்காச் சமயம்'' என்று போற்றப் பெறுகிறது

இந்நூல் தோன்றிய காலம் சகாப்தம் 1232. ''ஏழஞ்சு இருநூறு எடுத்த ஆயிரம், வாழு நற் சகனம்'' என்ற சரித்திரச் குறிப்பு ஆசிரியரது அருள் வாக்கு. கிறித்து சகாப்த வருடத்தைப் பெற மேற் சொன்ன எண்ணோடு 78 ஐக் கூட்டல் வேண்டும். அங்ஙனம் கூட்ட கி. பி. 1313 என்பது கிடைக்கின்றது. நாம் பெற்றுள்ள இச் சரித்திரக் குறிப்பு பல சிக்கல்களை விடுவித்துள்ளது. சாத்திர காலச் சரித்திரத்தை நிர்ணயம் செய்ய இக் குறிப்பு ஓர் பென்னம் பெரிய ஆதாரம்.

இந்நூலுள் விவாதிக்கப் படும் மதங்கள் பின் வருமாறு. (1) மாயா வாதம் (2) ஐக்கிய வாதம் (3) பாடாண வாதம் (4) பேத வாதம் (5) சிவசம வாதம் (6) சிவசங்கிராந்த வாதம் (7) ஈசுவர அவிகார வாதம் (8) நிமித்த காரண பரிணாம வாதம் (9) சைவ வாதம். இவற்றுள் மாயாவாதம் ஒன்றே புறச்சமயம். மாயா வாதத்தை ஐக்கிய வாதி நிராகரணம் செய்ய, ஐக்கிய வாதத்தை

பாடாணவாதி நிராகரணம் செய்ய இப்படி விவாதம்தொடர்கிறது. முடிவில் சைவசித்தாந்தம் ஒன்றே எஞ்சி நிற்கின்றது. இந்நூலின் அமைப்பும் போக்கும் இத்தன்மைய என்று கொள்ளலாம்.

அந்த அந்த மதத்திற்கான விவாதமும் அந்த அந்த மதத்தினரை முன்னிலைப் படுத்தியே மேற்கொள்ளப் படுகிறது. வாதம் செய்வோர்பால் காணக் கிடைக்கும் சமயப் பொறையும், காழ்ப்பின்மையும், அவர்கள் பாங்கறிந்து மன்றம் ஏறியதற்கான அழகிய சான்றுகள். இச்சிறப்பு நம்மால் போற்றி மேற்கொள்ளப் பட வேண்டிய ஒன்று.

1. மாயா வாதம்:

"இருப்பது வேதம் ஒன்றே என்பது வேதக் கருத்தாயின், அவ் வேதம் பிரமம், சீவன் என்ற இரண்டினைப் பேசுவது ஏன்? அவ் விரண்டும் அபேதம் என்பது உன் மதமானால், வேதம் அபேதம் கூறுவதோடு பேதத்தையும் கூறுவானேன்? பேதம், பேதாபேதம். அபேதம் என்று எப்படிச் சொன்னாலும் அனைத்தும் அபேதத்தையே குறிக்கும் என்று சொன்னால், வேதம் முரண்பாடு உடையது என்று ஆகும். ஆகவே, வேதத்திற்குக் குற்றம் உன் கூற்றால் விளையும்.

"பெத்த நிலையில் பேதமும், முத்தி நிலையில் அபேதமும் கொண்டால் என்ன தவறு? என்று நீ சொன்னால் உன் பிரமாணம் விடை சொல்ல முடியாது வரம்பில்லாது கூறுதல் என்ற குற்றத்தின் பாற்படும். மேலும் ஒருநிலையில் உண்மையாகவேபேதமாகஇருப்பது, வேறு ஒரு காலத்தில் அபேதமாகாது".

இப்படி இவ்வாதம் தொடர்கிறது.

சீவன் முத்தி பற்றி இங்கும் ஒரு சிறிது காண்போம். "ஆகாயத்துள்ளமேகம் காற்றடிக்கச் சிதறுவது போல மாயாபந்தம் விலகும் எனில், காற்றுப் போல இங்கு அறிவு பேசப் படுகிறது. பிரமத்திற்குச் சிறந்த அறிவு முன்னமேயே இருக்குமாயின், இடையிலே மயக்கம் தோன்றக் காரணம் என்ன? அறிவு இடையிலே தோன்றியது என்றுகூறும்போது, முன்னமே இல்லாதது யாங்ஙனம் இடையே தோன்ற ஒல்லும்?

"அது நீ ஆகிறாய் என்ற மகாவாக்கியம், பொருள் ஒன்றேஒன்று என்று சொல்லவில்லை. ஆகிறாய் என்பதில் உள்ள ஆதல் என்பது உவமையைக் குறிக்கும். ஆற்றலால் நீபுலி ஆயினை என்றால் புலியின் வேறாக நீ இல்லை என்றா பொருள்? அதுபோல நான் பிரமம் என்றால் நான் கலந்திருப்பதால் வேறு அலாது உள்ளேன் என்றுதான் பொருள்".

2. ஐக்கிய வாதம் :

"பதி பசு பாச உண்மையை இங்ஙனம் கூறுவோம். பதி ஒருவனே. பசுக்கள் அனந்தம். மாயை, இருவினை ஆகியவை பாசம். இருவினைக்கு ஈடாக வருவது தனு. ஆன்மா சுத்த அறிவை உடையது. மேகஞ் சூழ, சூரியன்ஒளி குன்றுதல் போல், உடம்பினால் பசுவின் அறிவுகுன்றும். இருவினைப் பயன்களைப் புசிக்கச் செய்பவன் பதி. புசித்தல் உடல் மூலம் நிகழும். புண்ணிய பாவ அனுபவம் சமம் ஆக, அதாவது அவை முற்றிலும் ஒழிய, சத்திநிபாதம் தோன்றும். யாவரும் அறிய இறைவனே எழுந்தருளி, அழுக்கு ஆடையைத் தூய்மை செய்தல் போல் ஆன்மாவையும் தூய்மை செய்வன். இந்நிலையில் நீரொடு நீர் கலக்குமாபோலே பேரறிவோடு கலத்தல் முத்தி".

இவ்வாதம் இவ்வாறு நிராகரிக்கப் படுகிறது.

"அறிவு சுத்தமாயின் அதில் பாசம் கூடுவது எப்படி? வினைக்கு ஈடாக உடம்பு தோன்றுகிறது எனில், உடல் இல்லாது இருவினை ஈட்டுமாறு எங்ஙனே? மேலும் எது முற்பட்டது? மாயாமலமா கன்ம மலமா? இவை உயிரோடு கூடக் காரணம் யாது? பாசம் வருதல் இயற்கை எனில் முத்தி நிலையிலும் அது வர வாய்ப்பு உண்டே? அப்பொழுது முத்தியால் ஆய பயன் என் கொல்?

"அறியாமையையும் அதன் வேர் மூலத்தையும் அறிதல் வேண்டும். அறியாமையை விளைவிப்பது ஆணவமலம் என்று அறிக.

"மேலும் உயிர் தூய அறிவு வடிவாயின், முத்தி நிலையில் அவ்வறிவு ஏன் வேறு ஓர் அறிவோடே கூடல்வேண்டும்? ஒளியோடு ஒளி அதிகப் பிரகாசம் என்று நீ வாதிடுவாயாகில், அக்கூற்றுக்கு இரு வகை ஒளிகளும் ஒரு தன்மைத்து என்று பொருள் ஆகுமா?

"மாயையும் வினையும் கூடுமுன் அறிவுசுத்தமாகஇருந்திருப்பின், அந்நிலையிலேயே அது இறைவனைக் கூடிப் பேரின்பம் துய்க்காது போனது ஏன்?

"முடிவில் நீரும் நீரும் கலத்தல் பற்றிக் கழறினாய். குடாகாய – மகாகாய உதாரணம் காட்டும் மாயாவாதி போல் நீயும் கட்டுரைக்கிறாய். உயிரும் பதியும் ஒரே தன்மை உடையனவா? இல்லையே. இப்பேச்சை விடு. உண்மை தெரிந்து, தெளிந்து நில்".

3. பாடாண வாதம் :

"சகஜ மலமாகிய ஆணவ மலத்தைப் போக்குதற்கு மாயை என்ற மலம் உயிர்களோடு சேரும். பதி இருவினைக்கு ஏற்ற

ஆன்மாக்களுக்குச் சரீரம் வழங்குகிருன். உடலோடு கூடி உயிர்கள் இருவினைப் பயன் துய்க்கும். அங்ஙனம் துய்க்குங்கால் ஆணவ மலத்தின் வலியால் (மறைப்பால்) உயிர்கள் வருந்தும்."

"கண்ணின் காட்சியைப் படலம் மறைக்குமா போல உயிரினது அறிவை ஆணவம் மறைக்கும். அதனுல் பிறவித் துன்பம் மிகும். இத்துன்பம் நீங்கி, ஆழ் துயிலில் துயரற்று உறங்குவது போல், உயிர் சுட்டறிவு யாதுமற்றுக் கல் போலக் கிடத்தலே முத்தியாம்."

பாடாணம் என்ருல் கல் என்று பொருள்.

இவ்வாதம் இங்ஙனம் மறுக்கப்படுகின்றது. "நீ கூறுகின்ற முத்தி, சைவ சித்தாந்தம் பேசுகின்ற கேவலநிலை ஆகும். பொறி புலன்கள் உயிருக்கு அறிவுவிளக்கம் தருவன. தரவே, அவையிற்ருேடு கூடிய உயிர் ஆணவ மல மறைப்பால் பாதிக்கப்படுவது யாங்ஙனம் என்பது பற்றி நீ சரியாக விளக்கவில்லை. கருவிகள் அகல்வுழி மருவிய துயரமும் நன்று எனல் ஆகும். படலம் நீங்கிய கண் சுகப் படுந்தானே? கருவிகளை மீட்டும் பொருந்திய போது வினையும் இன்பமும் அத்தன்மைத்தே".

"காட்சி, இன்பம், துன்பம் போன்ற எல்லாம் நீங்கி நிற்றல் முத்தியானுல், இறந்தோரும், கருவாய் நிற்போரும, மரமாகப் பிறந்தாரும் முத்தியடைந்தோர் ஆவர். இத்தகு முத்தி பெற ஆசானும் தேவையில்லை. கேவல நிலையில் அறிவு விளங்காத் துயரம் உண்டு. கல் போன்ற நிலை இதனினும் வேறு அன்று."

4. பேத வாதம் :

"செம்பில் கறையுறு களிம்பு குளிகையினுல் தாக்குறப்பட்டு, செம்பு தூய்தாக்கப்படும். அதுபோல் பாசத்தை இறைவன் வீழ்த்த உயிர்கள் முத்தியுறும். உயிரே முத்தி பெறுவானும், முத்திப் பேரு வும் நிற்கும்."

இதன் கண்டனம் வருமாறு :-

"தாம்பிரக் காளித நாசம் பாச நாசம் என்று மட்டும் கூறுவது சரியா? வேத ஆகம சாத்திரங்கள் கூறும் முப்பொருள் உண்மையும், அவையின் அழியாத் தன்மையும் என்னும்? இரசகுளிகையால் செம்பு தன்னிலைகெட்டுத் தான் அழிந்து, புதிதான பொன் நிலை பெறுமாயின், ஆன்மாவிற்கும் அதுபோல் அதனுடைய நிலைகெட்டுப் புதியதோர் தன்மை உண்டாதல் வேண்டும். அப்படி ஒரு கருத்து உன்வாதத்தின்வழி உதித்திடுமாயினும், நீயும் அதற்கு இசையாய்.

குளிகையின் தாக்கத்தால் செம்பு குளிகையாகாது பொன்னுை வேறு ஒன்று ஆகிறது. பசுவும் அதுபோல் வேறு ஓர் தன்மையுற வேண்டும். உண்மை அவ்வாறு இல்லை. உன் கொள்கை சரியன்று.''

5. சிவசம வாதம் :

சைவசித்தாந்தத்தைப் பெரும்பாலும் அடியொற்றிச் செல்லும் அகச்சமய தர்சனங்கள்போலவே, இவ்வாதம் அமைந்திருப்பினும், பிரமரகீட நியாயம் என்பதனை முத்திநிலைக்குக் காட்டாகக்கூறுவது இது. மேலும் முத்திநிலையில் உயிர்கள் ஐந்தொழில் இயற்றும் என்றும் இது கூறும்.

இதன் கொள்கை இப்படி மறுக்கப் படுகிறது. பிரமரம் என்றால் வண்டு என்று பொருள். கீடம் என்பது புழு. புழு வண்டாதல் அச்சு மாறிப் பிறத்தற்கு உவமை ஆவதல்லது முத்தியடைதற்கு அன்று. (குளவியால் கூட்டில் வைக்கப் பெறும் பச்சைப்புழு, கொட்டப்பட்டுக் கொட்டப்பட்டுக் குளவியாக மாறுவதில்லை. குளவி முட்டைகளை இடும். கூட்டில் உள்ள முட்டைகள் பொரிந்து குஞ்சுகளாக வெளி வரும் காலத்தில் அவற்றின் உணவிற்காக, அரைக் கொட்டுக் கொட்டப்பட்டு அசைய முடியா நிலைபெற்றுவிட்ட பச்சைப் புழு அக்கூட்டில் குளவியால் வைக்கப் படுகின்றது இதுவே விஞ்ஞானம் அறிவிக்கும் உண்மை என்றாலும் பிரமரகீட நியாயம் ஓர் இலக்கிய உத்தியாகப் பயன்பட்டுத் தேவைப்படும் விளக்கத்திற்கு ஆதாரமாக உள்ளது.) மேலும் எந்நிலையிலும் பசு பசுவே, பதி பதியே. முத்தி யடைந்த ஆன்மா ஐந்தொழில்இயற்றுது. "கரைக்கான்முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே" என்று வன்றொண்டர் வேண்டினரேத் அன்றித் தாமாகச் செய்தார் அல்லர். "தந்திட வேண்டும் என்றனர் அன்றே" என்று இதைவிளக்குகிறார் உமாபதி தேவநாயனார். நாழி முகவாது நானாழி. சிவனாதல் முற்றறிவை முற்றுமாய் உயிர்பெறும் என்பது பொருந்தாது. மேலும், முத்தியில் உடலோடு சீவன் இயங்கும் எனில், அது சீவன் முத்தியேயன்றி வேறாகாது. அத்தகு நிலை பதமுத்தியாய முடியும்.

6. சிவசங்கிராந்த வாதம்:

''அகலாத ஒளியையுடைய விளக்குப் போன்றது உயிர். அதற்குச் சுட்டியறியும் அறிவில்லை. விகாரமற்ற காந்தத்தின் முன் இரும்பு தொழில் படும். அதுபோல விகாரமற்ற உயிரைப் பிராண வாயு தொழிற் படுத்தும். ஐம்பொறிகள் புலன்களைப் பொருந்தா. பிராணவாயு பிரிய, உடல் தொழில் ஒழிந்து போகும்.

ஆணவமலம் அகல வேண்டிய பக்குவக்காலத்தே, உயிருள்ளே இறைவனது திருவருள் பிரதி பிம்பம் காட்டும். விறகில் தோன்றிய தீ விறகை அழிப்பது போலவும், உப்பளத்தில் இடப்பட்ட புல்லும் வைக்கோலும் தம்தன்மை கெட்டழிவது போலவும், அந்நிலையில் உயிர்த்தன்மை அழிந்து அருள் வடிவு தோன்றும். பசு கரணங்கள் முத்தியில் பதி கரணங்களாக மாற, உயிரறிவு இறையறிவேயாய் விடும். உயிர்க்கு யான், எனது என்ற உணர்வு மறைந்துபோம்.

இதற்கான நிராகரணம்: உயிர் ஒளியுடை விளக்கு எனில் அதன்கண் அறியாமை எப்படி நிற்கும்? உயிர் அறிவற்றது எனின் ஒளி உண்டாதற்கு ஏது ஏது?

உயிரும் விகாரமற்ற சடப்பொருள் போன்றது என்னில், அறிவுப் பொருளின் தொடர்பு அதற்கு ஏன்?

பிராணவாயுவே உடம்பை இயக்கும் எனின், துயிலுங்கால் அஃதியங்கியும் உடம்பு இயக்கம் உறுதது ஏனோ?

பசுகரணங்கள் சிவகரணங்கள் ஆனாலும், கரணங்கள் கொண்டு அறியப்படுவன மாயா காரியங்களே. அவை திருவருளாகா.

அருள் வேறு; உயிர் வேறு. இரு வேறு முதல்கள் ஒரு முதல் ஆதல் இல்லை.

7. ஈசுவர அவிகார வாதம் :

பொத்தல்கள் பல உடைய குடத்திலிட்ட விளக்குப் போன்று ஒன்பது வாயிற்குடிலையில் உயிர் அறிவாய் இலங்குவது. ஒருபொறி அறிந்ததை மற்ற ஒரு பொறி அறியாது. ஆகவே அந்த அந்தப் பொறியோடு கூடிய ஆன்மா விடய நுகர்ச்சி பெறுகிறது. பொறி வாயிலாகவே நுகர்ந்து அறிவது உயிர் இருளில் கிடக்கும்பொருளை எடுக்க விளக்கு எடுத்துச் செல்வர். மலபரிபாக காலத்தில் இறை ஞானம் இவ் விளக்குப் போல் உதவ, உயிர் பேரின்பம் உறுகிறது.

இம்மதம் மறுக்கப் படும் விதம் இப்படி:

விளக்குப்போன்றது ஆன்மா எனில், அவ்வறிவுப் பொருளுக்குப் பொறிகளின் உதவி வேண்டுவதில்லையே. கண் பார்வை உள்ளவன் ஒளியில் பொருள்களைத் தடவியா இனங் காண்டல் வேண்டும்? ஆன்ம அறிவு குறையுடை அறிவு. விளக்கம் வேண்டுவது. பொறியினைக்கொண்டே புலனை நுகரவல்லது. இந்நிலை இறைவர்க்கு இல்லை. அவர் கண்ணாலே எரிப்பார்; வாளில்லாமல் வெட்டுவார்.

உயிரும் இறையருள் கொண்டே அருஞ்செயல் சாதிப்பது. சான்றாக, ஆளுடைய பிள்ளையாரின் பதிகங்களை ஏடுபடுத்திய அன்பர் "களிறு என அணைந்த கன்மனப் புத்தன், முருட்டுச் சிரம் ஒன்று" மொழியால் உருட்டினரே யன்றி, வாளால் அன்று. உயிர், அதுபோல, அறிதலும் அருள் வலியால் என்க. மாசற்ற அகண்டித அறிவு உயிருக்கு அமைவது திருவருளாலே.

அருளன்றி அமையாதுஒருபொருளும். கருவிகள் அறிவற்றவை. அவை நீங்கிய உயிர் உறுவது துரிய நிலை. முதல்வனது ஞானம் அவன் அருளக்கொண்டு உயிர் பயன் உறும். அந்த ஞானத்தை உயிர் தானே அறிந்து பயன் கொள்ள வல்லதன்று. சூரியன் சொலித்தாலும், குருடர் அதைக் கொள்ள முடியாது.

இறைவன் உயிரை ஆட்கொள்ளாது போனல் உயிர்க்கு உறுதி கிட்டாது.

8. நிமித்தகாரண பரிணும வாதம் :

உலகு சிவசத்தி வடிவம். (சிவம் அருவம்; சத்தி உருவம்) வையத்தே சட வஸ்து இல்லை. பொன்னிற்கும் அதனல் இயன்ற பணிக்கும் வேறுபாடுள்ளது போல் அறிவிற்கும் உலகிற்கும் வேறுபாடு ஒரு வழியாகக் கூறுதல் உண்டு. இரண்டும் ஒன்றே. ஒன்று காரியப்பட்டது என்றும் மற்றது காரியப்படாதது என்றும் கொள்க.

உயிர்கள் பல என்பது தோற்றமட்டுமே. உள்ளது சிவ முதலே. பேதங் காட்டும் பன்மை உண்மை யன்று. சிவமெனும் உணர்ச்சி கைவருதல் எளிதன்று. நான் உயிர், அவன் கடவுள் என்ற துவைத பாவம் குற்றமுடையது. கருவி முப்பத்தாறும் செயல்படும் சாக்கிரத்தில அதீதத்தில் நிலைபெற்று நிற்றலே சிவகதியாம் சுத்தநிலை.

நிராகரணம் : "இவ்வாதப்படி முதல், நிமித்தம், துணை என்ற முக்கரணங்களும் இறைவனே என்று ஆகும். இது பொருந்தாக் கூற்று. ஐந்தொழிலுக்கான காரணமும் இங்குப் பெறுமாறு இல்லை.

"சித்தாகிய சிவம் அசித்தாகிய இவ்வுலகைத் தன்னிடத்தின்று தோற்றுவிக்காது. உலகம் சித்தெனில், அசித்துத்தான் யாதோ? சிவம் அருவம், சத்தி உருவம் என்னில் இரண்டுமே மாயையின் காரியமாய் முடியும்.

"கருவிகள் நீங்கிய நிலையில் அறிவு உறுவது யாங்ஙனம்? உன் அறியாமை நீங்க நீ உண்மையைச் செவி மடுப்பாயாக."

9. சைவவாதி சங்கற்பம் :

கேவல நிலையில் ஆன்மா ஆணவ மலத்தோடு கூடி அறிவற்று இருக்கும். சகல நிலையில் அறிவாய் அறியும். கலை முதலிய கருவிகளை இறைவன், கண்ணிற்கு விளக்கு உதவுதல் போல், உதவுவன். இருவினைப்பயனை நுகரும் உயிர், எழும் பிறவிக்கான வினையை விளைக்கும்.

பல பிறவிகள் எடுத்து எய்த்த உயிர் மலபரிபாகம் உற்று, சத்தி நிபாதம் அடையும். அதுபோது இறைவன் தோன்றி உயிரின் செல்கதி ஆய்ந்து, நன்னெறியில் நிறுத்தி முற்றிய நிலையில் ஞானமும் அருளுவன். அந்நிலையில் உயிர் தன்னையும், தலைவனையும், அறிவையும் சுட்டி அறியாது சிவத்தோடு முயங்கி ஒரு முதலாகி, வெறுப்பு விருப்பு அற்றிருக்கும். இது சிவ கதியாகும்.

நிராகரணம் :

இவ்வினத்தால் வாதம் கணபங்கவாதமாக முடிகிறது. அல்லது முன்னுக்குப் பின் முரண்பாடுடைய கொள்கையாக முடிகிறது. கருவிகளால் வரும் மயக்க அறிவு ஒருநாளும் நல்லறிவாகாது.

மலபரிபாகம் பற்றியும் சத்தி நிபாதம் பற்றியும் நல்ல விளக்கம் இங்கு இல்லை.

"நன்னெறியாம் சரியை முதலிய ஞானம் தோன்றற்கு நிமித்த மாத்திரம்; அவை முதற்காரணம் ஆகா. மேலும், உயிரும் இறைவனும் முத்தி நிலையில் ஒருபொருள் ஆகும் என்பது ஏகான்ம வாதமன்றோ? பொருள்கள் ஆறு : (1) இறை (2) இறையறிவு (3) உயிர் (4) உயிர் அறிவு (5) பாசம் (6) பாச அறிவு. இவற்றுள் பாச நீக்கம் பேசப்பட்டது. உயிர் அறிவும், பாச அறிவும் யாங்ஙனம் அழிந்து பட்டன என்று கூறப்படவில்லை. முடிவில் பசு, பதி என இரண்டே எஞ்சி, அவையும் அத்துவிதக் கலப்புற்ற தன்மை அடைந்தது, திருவாசகத்துள் "சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றும்" என்ற அடியில் காட்டப்பட்டிருக்கிறது. முடிநிலையில் இன்பமில்லை என்றால், அதனால் ஆயபயன் என் கொலோ?"

ஒன்பதுவகை வாதங்களும் மறுக்கப்பட்ட நிலையில், சித்தாந்தப் பட்டிருக்கும் கொள்கை சிவப்பிரகாசத்தில் காட்டப்பட்டு உள்ளது என்ற குறிப்போடு இந்நூல் நிறைவுறுகின்றது. நிராகரிக்கப் பட முடியாத தர்சனம் சைவ சித்தாந்தமே என்பதை நடுவு நிலையில் நின்று ஆய்வு செய்தால் தெளிவாக விளங்கும். இத்தெளிவு குருவருளால் கிட்டுவது என்பதை மறத்தல் கூடாது.

குருவருள் வாழ்க ! திருவருள் வெல்க !

தை மாதச் சிறப்பு நாட்கள்

15—1—88 வெள்ளி, உத்தராயண புண்ணியகாலம். திருவையாறு மாதப் பிறப்பு தீர்த்தம். திருக்கடவூர் ஸ்ரீ காலசம்ஹார மூர்த்திக்கும், திருக்குறுக்கை ஸ்ரீ காமதகனமூர்த்திக்கும் அபிஷேகம். சீகாழியில் ஸ்ரீ உமாமகேசுவரருக்கு உச்சிக் காலத்தில் புழுகாப்பு. குத்தாலத்தில் ஸ்ரீ சந்திர சேகரர் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல். மகர சங்கராந்தி, பொங்கல்பண்டிகை, இரவு வேளூர் ஸ்ரீதையல்நாயகிக்குச் சந்தனலங்காரமும் நவசக்தி அருச்சனையும் நடைபெறும். சீகாழி, கடவூர் முதலிய தலங்களில் நவசக்தி அருச்சனை. தைமாதம் ஒவ்வொரு சுக்கிரவாரமும் நடைபெறும்.

16—1—88 சனி, கணுப்பண்டிகை, மாட்டுப்பொங்கல். சனிமஹா[பிரதோஷம்.

17—1—88 ஞாயிறு, கன்னிப்பொங்கல். மாதசிவராத்திரி.

18—1—88 திங்கள், சர்வ அமாவாசை.

19—1—88 செவ்வாய், வேளூரில் உண்டியல் வைத்தல். ஸ்ரீ செல்வ முத்துக்குமார சுவாமிக்கும், ஸ்ரீ சண்முகருக்கும் சண்முக அருச்சனை. தைச்செவ்வாய்க்கிழமைகளில் நடைபெறும்.

22—1—88 வெள்ளி, வேளூர் ஸ்ரீ கற்பகவிநாயகர் தை மாத சுக்கிரவார உற்சவ ஆரம்பம். ஸ்ரீ அப்பூதி அடிகள் குருபூஜை.

24—1—88 ஞாயிறு. குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீஸ்வரசுவாமிக்கு சம்வத்ஸராபிஷேகம். புஷ்ய உற்சவாரம்பம். ஸ்ரீகலிக்கம்பநாயனார் [குருபூஜை.

25—1—88 திங்கள், ரதசப்தமி. திருவையாறு தீர்த்தம்.

26—1—88 செவ்வாய், குடியரசு தினம்.

27—1—88 புதன், கிருத்திகை விரதம், தருமை சண்முகர் அபிஷேகம்.

28—1—88 வியாழன், வேளூர் கிருத்திகை.

29—1—88 வெள்ளி, வேளூர் ஸ்ரீ கற்பகவிநாயகர் தை மாத சுக்கிரவார உற்சவபூர்த்தி. ஸ்ரீ கண்ணப்ப நாயனார் குருபூஜை.

30—1—88 சனி, தருமை ஸ்ரீ அஷ்டாதசபுஜமகாலக்ஷ்மிதுர்க்காம்பிகை சம்வத்ஸராபிஷேகம்.

31—1—88 ஞாயிறு. பிரதோஷம். வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கு கடைச் செவ்வாய் உற்சவ ஆரம்பம். குருப் பெயர்ச்சி காலை மணி 7-20. ஸ்ரீ அரிவாட்டாய நாயனார் குருபூஜை.

1—2—88 திங்கள், தருமை ஸ்ரீ வன துர்க்காம்பிகை சம்வத்ஸர அபிஷேகம்.

2—2—88 செவ்வாய், பௌர்ணமி விரதபூசையில் தேன் அபிஷேகம். தைப்பூசம். திருவையாறுதீர்த்தம். வடலூர் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் ஜோதி தரிசனம், வேளூர் ஸ்ரீ பஞ்ச மூர்த்திகள் [புறப்பாடு.

3—2—88 புதன், ஆயில்யவிழா.

6—2—88 சனி, சங்கடஹரசதுர்த்தி. ஆலவேலி ஸ்ரீ சித்திவிநாயகருக்கு சம்வத்ஸராபிஷேகம். ஸ்ரீ சண்டேசநாயனார், ஸ்ரீ திலகவதி அம்மையார் குருபூஜைகள்.

7—2—88 ஞாயிறு, பேரளம்ஸ்ரீசுயம்புநாதசுவாமிசம்வத்சராபிஷேகம்.

8—2—88 தருமை ஆதீனம் 15 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள் குருபூஜை.

10—2—88 புதன், திருச்சி மௌனகுரு சுவாமிகள் ஸ்ரீ தாயுமான சுவாமி, ஸ்ரீ திருநீலகண்ட நாயனார் குருபூஜைகள்.

11—2—88 வியாழன், விளநகர் ஸ்ரீ துறைகாட்டும் வள்ளலார் சுவாமி சம்வத்ஸராபிஷேகம்.

GNANASAMBANDAM

Regd. No. TN / M. M. 1
வெளிநாடு Regd. No. TN / M. M. 4

தருமை ஆதீனம்

ஞானசம்பந்தம் பதிப்பக வெளியீடுகள்

1. ஆசௌச தீபிகை

தருமை ஆதீனத் திருக்கூட்டத்து அடியாருள் ஒருவராகிய ஸ்ரீ தமிழாகர முனிவர் இயற்றியது. உலக வாழ்வில் சமய நெறி கடைப்பிடித்து ஒழுகுவோருக்கு பிறப்பு, இறப்புக்களால் வரும் தீட்டுக்களைப் போக்கிக் கொள்ளுதற்கு உரிய விதி முறைகளைக் கூறுவது. ஆகமங்களில் கூறும் ஆசௌச பிராயச் சித்தங்களைத் தொகுத்துத் தமிழில் கூறுவது. இனிய செய்யுள் நூல். தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி பதினூரும் ஆண்டுக் குருபூஜை மலராக வெளியிடப் பெற்றுள்ளது.

அளவு : டபிள் கிரவுன் 1×16. பக்கங்கள் 64.
அடக்க விலை .... ரூ. 1—50
அஞ்சல் செலவு (நூல் அஞ்சல்) காசுகள். 0—60

2. திருவிடைக்கழி தலச் சிறப்பும், திருவிசைப்பா, திருப்புகழ் முதலிய தோத்திரங்களும்.

முருகப்பெருமானுக்குரிய சிறந்த தலங்களில் ஒன்றுன திருச்செந்தூர் போலச் சோழநாட்டில் விளங்கும் தலம் திருவிடைக்கழி. இத்தலச் சிறப்புக்கள், மற்றும் இத்தலம்பற்றிச் சேந்தனுர் அருளிய திருவிசைப்பா, தலம் பற்றிய திருப்புகழ் முதலிய தோத்திரங்கள் ஆகியன இந்நூலில் இடம்பெற்றுள்ளன. தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் (பிரபவ - கார்த்திகை) விழா மலராக வெளியிடப் பெற்றுள்ளது.

அளவு : டபிள் கிரவுன் 1×16. பக்கங்கள் 32.
அடக்க விலை .... ரூ. 1—20
அஞ்சல் செலவு (நூல்அஞ்சல்) காசுகள். 0—30

செயலாளர், ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமை ஆதீனம், தருமபுரம்,
மயிலாடுதுறை - 609 001, தஞ்சை மாவட்டம்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram, at the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai 10 — 1 — 88